SUPPLEMENT TO THE "CATHCLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "GUARDIAN" JAFFNA.

Telephone: No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

74-ம் புத்தகம் 28-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு ஆடி மாசம் 21-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## "அப்பா! நீங்கள் ஓர்..."

அன்று மாசிமாதத்தில் ஓர் நாள். அதிகாலை 4 மணியிருக்கும். பின்பனி பெய்கின்றது. எங்கும் அமைதி நிலவுகின்றது. அத்தருணம் அரசினர் பெரிய ஆஸ்பத்திரிஒன்றிலே இருபத்துமூன்ரும்கட்டிலில் சயனித்திருந்த யான் நித்திரைகலைந்து அப்பக்கமும் இப்பக்கமுமாகப் புரண்டு புரண்டு படுத்தவண்ணமிருந்தேன். அப்போது இளவயசுள்ள ஓர்நேர்ஸ் அமைதியாகநடந்து பிணியாளரை ஒருவர்பின்ஒருவராகத் தட்டியெழுப்பிக் காய்ச்சல்அவதானிக்கும் கருவிகொண்டு அவரவர் காய்ச்சல்நிலைமையை அறிந்து பதிவுசெய்துகொண்டே சென்ருள். அவளின் சாந்தமான போக்கும், தயவானபேச்சும் பிணியாளருக்குச் சாந்தியளிப்பனவாய் இருந்தன.

அவ்வமையம் யாரோ அதிகம் உரத்தசப்தமாய்அனுங்கிஅனுங்கிக்கொண்டு எதிரே தூரத்தில் வருவது என்செவியில் விழவே, மெதுவாகத் தலையைஉயர்த்தி அந்தப்பக்கமாக எறிட்டுப்பார்த்தேன். புதியநோயாளிஒருவரை இருவர்சேர்ந்து அடிமேல்அடிவைத்துப் பதமையாகஅணைத்து நடத்திக்கொண்டு வந்தனர். அதைக்கண்டதே நேர்ஸ் விரைந்துசென்று தானுங்கூட அந்த நோயாளியைக் கரத்திற்பிடித்து அழைத்துவந்து எனதுகட்டிலுக்கு வலப்புறமாக வெறுமையாயிருந்த மூன்ருவதுகட்டிலிலே மெதுவாகப்படுக்கவைத்தனள். அதன்மேல்வழமைபோல அந்த நோயாளியினதும் காய்ச்சலைப் பரிசோதித்து அறிந்துகொண்டதும் எதனையோசிந்தித்தவளாய் உடனே அவரதுநாடியைப் பார்த்துவிட்டுச் சிறுகமலைத்துப் போய்நின்ருள். அவள்வதனமே நோயாளியின் நிலைமையைக் காட்டும்பளிங்குபோல் காணப்பட்டது. ஆனல், அதைக்கொண்டுநோயாளிஒன்றில்சீவாபாயமான நிலைமையில் இருக்கின்ருரா? அன்றேல் வைத்தியசிகிச்சை அவசியம்பெறவேண்டிய ஆபத்தானநிலைமையில்தான் இருக்கிருரா? என்பதை அறிய முடியாமலிருந்தது.

அப்போதுநேர்ஸ் பின்முன் பாராது நோயாளியிடம் பொறித்த ஓர்வினவையும், "ஆம், அம்மா" என்று அவர்கூறியவிடையையும்கேட்டு நான் பிரமித்து நிற்கும்போது, நேர்ஸ் தனக்குச் சமீபமாகநின்ற கண்காணியை விழித்து: ஓடிச்சென்று அவசியமாக யாரையோ அழைத்துவருமாறு பரபரப்புடன் கூறினள். அவள்மெதுவாகக்கூறியது என் செவியில் விழவில்லைத்தான். ஆனல், அவள்கண்ணும்கையும், முகமும்வாயும் காட்டியசைக்கினையும், அவள்காண்பித்தஆத்திரமும் அங்கு பிரகாசித்துக்கொண்டிருந்த மின்சாரவெளிச்சத்திலே நன்ருகஎனக்குப்புலப்பட்டன. கண்காணியும் காலந்தாழாது ஓர் கைலாந்தரையும் எடுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாக விரைந்துசென்றனன்.

"அப்பா, நீங்கள் ஒரு ....? இந்தவிதம்நேர்ஸ் அந்தநோயாளியிடம் கேட்கவேண்டிய காரணம்என்ன? ஆம், காரணம் ஒன்று இல்லாமல்இல்லை. ஆஸ்பத்திரியில் நான்தங்கியிருந்த இருபத்தொருதினங்களிலும் அதே'வாட்'டில் என்போலும் அநேகநோயாளர் பட்டவேதனைகளை என்கண்ணூரக் கண்டிருக்கிறேன். அவர்கள் இட்ட பயங்கரகூச்சல்களையும் என்செவியாரக் கேட்டிருக்கிறேன். இளவயசுள்ள ஓர்அழகியவாலிபர். வயசு 21வரையில் இருக்கும். உருண்டு திரண்ட மேனியையுடையவர். மாதர்களுக்குப்போல அவருக்கும் நீண்டதலைமயிர். கலியாணஞ்செய்து ஐந்துமாதம் இன்னும் ஆகவில்லையாம். நோய் இருப்புச்சுவாதம். ஆகையால் நிமிர்ந்துபடுத்தறியார். ஆஸ்பத்திரியில் அவர் தங்கியிருந்த ஆறுதினங்களிலும் சாய்மானக்கட்டிலிலேயே சாய்ந்துகிடந்தார். தமையனர்ஒருவர் பக்கத்திலிருந்து மிகுந்தபட்சத்துடன் அவரைப் பராமரித்துவந்தார். டக்றர்மாரும் ஒருவர்பின் ஒருவராகவந்து ஊசிமருந்துகள் ஏற்றியும், நேரத்துக்குநேரம் மருந்துகள் மாற்றிக்கொடுத்தும் அவரைநன்ருகப் பரிகரித்துவந்தனர். ஆனல், நோயோ படிந்தபாடில்லை. படிக்குப்படி ஏறிக்கொண்டேவந்தது. இந்தவாலிபர் அந்தஇருமூன்று தினங்களிலும் "அண்ணஅண்ண" என்று இரவு பகலாகஇட்ட பரிதாபகரமான பெருங்[illegible] செவிகளில் இன்னுமே தொனித்துக்கொண்டிருக்கிறது. கடைசியாக அந்தியவேளை அடுத்துவந்து அண்ண அண்ணஎன்று அலறிக்கொண்டே ஓர்நாள்அதிகாலை அவர் உயிர்துறந்தனர். ஓர்புத்தசிங்களவர். இவரும் ஆபத்தானநோய் கண்டு பயங்கரவேதனை அனுபவித்தார். அதனைத் தாங்கவாற்ருது "அம்மே, அம்மே" என்று எந்தநேரமும் அலறிக்கொண்டேயிருந்தார். கடைசியாக அம்மேஅம்மே என்று சொல்லிக்கொண்டே மரணமடைந்தார். மற்ருெருவர் தனக்குண்டான அகோரவேதனையைத் தாங்கவாற்ருது "ஐயோ ஐயோ" என்று சிலதினங்களாகக் குரவையிட்டுவந்து கடைசியாக ஐயோஐயோ எனச் சொல்லிக்கொண்டே ஆவிநீத்தனர். இன்னெருவர் முன்னே நல்லநிலைபரம் உடையவராயிருந்தார். அவர் கையில்பிடித்திருந்தவெள்ளிப்பூணிட்ட நல்லஊன்றுகோலே அதற்குப் போதியசான்று. ஏழுவருடமாக அவர் நோய்வாய்ப்பட்டிருந்து உள்ளதெல்லாம் செலவாக, அதுகாலவரை அவரைப் பராமரித்துவந்த மனையாளும் ஈற்றிலே கண்பார்வை இழந்துபோக, ஆற்ருது கடைசியாய் ஆஸ்பத்திரியை அடைந்தார். உடல்முழுவதும் வீக்கங்கண்டு வருந்தினர். சிலமணிநேரத்துக்குமுன் தன்னைக்காண வந்த சிலரைநோக்கி: சாகவேதான் அங்கு வந்ததாகச் சாற்றினர். பிற்பகல் 3மணி இருக்கும். சலபாதைக்கு எழுந்துநின்றவர் கட்டிலில் சரிந்ததுதான் யாதாமோர் பேச்சுமூச்சின்றியே பிராணன் அந்தோ! பிரிந்துபோய்விட்டது. நெருப்புக்காய்ச்சலால் வாடிவதங்கிய பாலியர்ஒருவர் ஊசிமருந்து ஏற்றும்போதும், ஏனையவேளைகளிலும் "அம்மா, அம்மா" என்று இட்ட அபயசப்தம் எவர்மனதையுமே உருகச்செய்வதாயிற்று. இவ்விதம் அண்ண, அம்மே, ஐயோ, அம்மா, ஆகூஎன்ற அபயத்தொனிகள்மத்தியிலே இந்தப்புதியநோயாளி அனுங்கியவண்ணம் கூறிய மொழியோ பரந்தஆகாயமண்டலத்தையே ஊடறுத்துப் பரலோகமட்டாய்ச்சென்று எவரையோ இனிதே அழைப்பதுபோல் [illegible] அந்தமொழியை அந்நோயாளியின் வாயிலிருந்து கேட்கக் கேட்க, எனதுசெவிகளில் ஓர்விதஇன்பத்தேன்வந்து பாய்வதுபோல் இருந்தது. அதனல் "அப்பா, நீங்கள் ஓர் ...." என்று நேர்ஸ், அவரைக் கேட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லைத்தான். ஆனல், ஏன் அப்படிக்கேட்டாள் என்பதுதான் எனக்கு ஒன்றுமாகப் புரியவில்லை. அதனல் யாரைக் கண்காணி அழைத்துவருகிருனே பார்ப்போம்என்று மிகுந்தஅங்கலாய்ப்புடன் விழித்தகண் விழித்தபடியே அவர்கள் வரப்போகும் திசையை எதிர்நோக்கியவண்ணம் இருந்தேன்.

சிலநிமிஷங்கள் சென்றன. பால்போலும் தூயவெண்மையான அங்கிதரித்த ஓர்ஐரோப்பிய கன்னிகாஸ்திரீ காற்றினும் கடிதாய் ஓர்பூலோக சம்மனசே போன்று ஆத்துப்பறந்து அந்தக் கண்காணி பின்தொடர எனது 'வாட்'டைநோக்கி வந்துகொண்டிருந்தார். அதன்வாயிலிலே நேர்ஸ்காத்துநின்று அவரை உள்ளேஅழைத்துவந்து நோயாளியைக் காண்பித்தாள். கன்னிகாஸ்திரீ அற்பமும் தாமதியாது கைநாடியைப் பார்த்துவிட்டு, தமதுசிரசை இரண்டொருமுறை அசைத்துவிட்டு, கீழேகுனிந்து நோயாளியிடம் ஏதேதோவெல்லாம் மெதுவாகக்கேட்டார். எல்லாத்துக்கும் "ஆம்" என்றவிடையே கிடைத்தது. பின்னர்நேர்ஸ் பக்கமாகத் திரும்பி நோயாளிக்குப் பிராணவாயுசெலுத்துமாறு கூறிவிட்டு முன்னிலும்அதிவேகமாய் வந்தவழியே திரும்பிச் சென்ருர். பிராணவாயு செலுத்தும்படி அவர் நேர்ஸிடம் கூறியதைக் கேட்டதே நோயாளி சீவமோசமான நிலைமையில்தான் இருக்கிருர்என்பது நன்ருக எனக்குப் புலப்பட்டுவிட்டது. அதனல் அந்தக்கன்னிகாஸ்திரீ ஆஸ்பத்திரியிலே கத்தோலிக்க நோயாளரை விசாரணைசெய்துவருகின்ற குருவானவரை விரைந்துவரும்படியாய்த் தெலிபோன் மூலம் தெரிவிக்கப்போகிருரென்றே நான் ஊகித்துக்கொண்டேன்.

உடனேநான் நோயாளியைப் பாவசங்கீர்த்தனத்துக்கு ஆயத்தப்படுத்துவது நலமாகுமென நினைந்து எனதுபடுக்கையைவிட்டெழுந்து, அவர் பக்கமாகச் சென்றேன். அவர் முன்பின் எனக்கு அறிமுகமானவராய்க் காணப்படவில்லை. ஆனல், அவ

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய நகரின் ஆயத்தம்

1950-ம் ஆண்டின் பரிசுத்தவருடத்திலே 60 லட்சம் பேருக்கு மேற்பட்ட திருயாத்திரிகர் நித்தியநகராகிய ரோமாபுரியைத் தரிசிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் 25 லட்சம் யாத்திரிகர் வெளிநாடுகளிலும், ஏனையோர் இத்தாலியின் நானுபகுதிகளிலிருந்தும் அங்கு செல்லவிருக்கின்றனர். 10 லட்சம் பேருக்குமேற்பட்டோர் ஆகாயவிமானங்களில் அங்கு போய்ச்சேருவர். அதனுல் உலகின் மகாச்சிறந்த விமானநிலையங்களில் ஒன்ருய் அந்நகரில் விளங்கும் சியாம்பினோ விமானநிலையம் தினமும் நானூறு விமானங்களுக்குமேல் ஏறியிறங்கப் போதியவசதியைக் கொண்டதாயிருக்கும். ரோமைநகர் மேயரான சிஞ்ஞோர் றெபெஸ்ஸினி அவர்கள் செய்துள்ள திட்டத்திலே பரிசுத்தவருடத்தில் அங்கு முந்நூறு புதிய திறும் வண்டிகள், பஸ்வண்டிகளை ஓடவைக்க ஒழுங்குபண்ணியிருக்கிறுர். சம்பேதுருவானவர் மகாஆலயத்திற்கும், ஏனைய மகாஆலயங்களுக்கும் செல்லுகின்ற வீதிகளெல்லாம் திருத்திப் புதுப்பிக்கப்படவிருக்கின்றன. வடக்குப்பகுதியிலிருந்துவரும் தரிசகர்களுக்கென்று தைபர் நதிக்கு மேலாக ஓர்புதியபாலம் கட்டப்படுகிறது.

### புதிய அர்ச்சியசிஷ்டர்

இரக்கத்தின்மாதா குமாரத்திகள் சபை எனும் கன்னிகாசபையை அடியிட்டவ்ளான முத். மேரி யோசெவ் றெசெல்லோ அம்மாள் சென்ற ஆனி மாதம் 12-ந்திகதி அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்பெற்றபோது ரோமாபுரியிலுள்ள முந்நூற்றுக்கு மேற்பட்ட ஆலயங்களின் மணிகளெல்லாம் அரை மணித்தியாலமாக ஆர்ப்பரித்து நின்றன. வறியபெற்ருேரின் புதல்வியான இப்புதிய அர்ச்சியசிஷ்டவள் இத்தாலிய றிவியேருவைச்சேர்ந்த அல்பிசோலா எனுமிடத்தில் 1811-ம் ஆண்டு வைகாசி மாதம் 27-ந்திகதி பிறந்தாள். சவோனு நகரிலுள்ள தனவந்தர் குடும்பமொன்ருல்சுவீகாரப்பிள்ளையாக ஏற்று வளர்க்கப்பட்ட இவள் அக்குடும்பத்தால் தனக்குக் கொடுக்கப்பட்ட ஏராளமான சொத்துகளையெல்லாம் அறவே வெறுத்து முன்சொன்ன கன்னிகா சபையை அடியிடலாயினள். 1880-ம் ஆண்டு மார்கழிமாதம் 7-ந்திகதி இவள் மரணமடைந்தபோது, ஆதரவற்றபெண்களைப்பாரமரிக்கும் 62 மடங்களை இச்சபை கொண்டிருந்தது. பதினொராம் பத்திநாதபாப்பானவர் 1938-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6-ந்திகதி இந்த அம்மாளுக்கு முத்திப்பேறுபெற்றபட்டஞ் சூட்டப்படலாயினர்.

### சவேரியாரின் வலதுகரம்

அர்ச். பிரான்சீஸ் சவேரியார் யப்பானிய தேசஞ்சென்ற நான்காம் நூற்றுண்டுவிழாவை ஞாபகப்படுத்தி, அங்கு சென்ற வைகாசிமாதம் 29-ந்திகதி முதல் ஆனிமாதம் 12-ந்திகதி வரையில் நடந்தேறிய மகாயாத்திரையின்போது, ரோமாபுரியிலே யேசு என்னும் திருஆலயத்தில் இருந்துவந்த அவ்வர்ச்சியசிஷ்டரின் வலதுதிருக்கரமானது அங்கு கொண்டு செல்லப்படலாயிற்று. அது ரோமாபுரியிலிருந்து ஓர்விசேஷ ஆகாய விமானத்திலே அத்திலாந்திக்சமுத்திரத்திற்கு மேலாகவும், அமெரிக்காவுக் கூடாகவும், பசிபிக் சமுத்திரத்திற்கு மேலாகவும் பதினையாயிரம் மைல்தூரப் பிரயாணத்தின்மேல் யப்பானின் தலைப் பட்டணமாகிய ரோக்கியோநகர் விமானநிலயமொன்றைச் சேர்வதாயிற்று. அதனுல் தூரகிழ்தேசங்களின் முதற்கிறீஸ்தவர்களான தங்கள் முன்னோரை ஞானதீட்சையளித்து ஆசீர்வதித்த அவர் திருக்கரத்தை யப்பானியமக்கள் மற்றுமோர்தரம்காணும் அதிஷ்டத்தைப் பெற்றுக்கொண்டார்கள். இந்தவிழாவிற்குப் பாப்பரசர் பிரதிநிதியாகத் தெரியப்பெற்றவரும், ஆஸ்திறேலியதேச சிட்னிநகர் அதிமேற்றிராணியாருமான கருதினுல் ஜில்ரோய் ஆண்டவரும் ஆஸ்திறேலிய ஆகாயப்படையைச்சேர்ந்த விமானம் ஒன்றில் அங்குசென்று நாகாசகிநகருக்கும், யூருகாமி என்ற கத்தோலிக்க குடியேற்ற தலத்துக்கும் இடைப்பட்ட குன்றிலே விழாவை ஆரம்பித்துவைத்தனர். அர்ச். பிரான்சீஸ் சவேரியார் அத்தேசத்தில் முதன்முதலாகக் கிறீஸ்துவேதத்தைப்போதித்து 46 வருடங்களின் பின்னர் இந்தக்குன்றில்தான் 26 யப்பானிய கிறீஸ்தவர்களும் ஆறு ஸ்பானிய பிரான்சீஸ்குவின் சபைக் குருமாரும் தங்கள் வேதத்துக்காகச் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டு வேதசாட்சிகளானுர்கள். அதனுல் ஜெருசலேம்நகருக்கு வெளியே கொல்கொதாவைப்போன்று இதுவும் நாகாசகிநகருக்கு வெளியேஓர்பூசித குன்றுகத் திகழுகின்றது.

### வத்திக்கானும் பார்சியாவும்

பதினைந்து மாதகாலம் ஒன்ரேடொன்று கலந்துபேசியதன்மேல் பரிசுத்தஸ்தானத்துக்கும், பார்சீகநாட்டிற்குமிடையே இராசியஉறவு ஏற்பட்டிருக்கிறது. பார்சீகஅரசு பரிசுத்தஸ்தானத்தினிடமாகத் தனது முதல் ஸ்தானீகராகப் பறிட் ஷலாவிஅவர்களை நியமனஞ் செய்திருக்கிறது. கத்தோலிக்க திருச்சபைச் சரித்திரத்திலே பார்சியா தனிப்பட்ட விசேஷமுடைய ஓர்நாடு என்றும், அந்தியோக்நகர் அர்ச். இராயப்பரின் முதல் மேற்றிராசனமாய் விளங்கியிருந்தென்றும் பாப்பரசின் இராச்சிய மந்திரியார் குறிப்பிட்டிருக்கின்ருர். எல்லாமாக 35 லட்சம் குடிசனங்களைக்கொண்ட இந்நாட்டில் 3,75,000 கத்தோலிக்கர் இருந்துவருகிருர்கள். பரிசுத்த ஸ்தானத்துக்கும், பிலிப்பைன் தீவுகளின் குடியரசுநாட்டுக்குமிடையில் இராசியஉறவு ஏற்பட்டிருப்பதும் சமீபத்திலே அறிக்கையிடப்படவிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது.

### ஜெருசலேம் திருச்சிலுவை

கல்வாரிமலையிலே நிறுவப்பட்டிருந்த பத்துஅடி நீளமான திருச்சிலுவை சீரியா, லெபனன், இத்தாலிய நாடுகளுக்கூடாக ரோமாபுரிக்குக்கொண்டு செல்லப்பெற்று, அங்கே பரிசுத்தபிதாவால் ஆசீர்வதிக்கப்பட்டபின் தற்போது பிராஞ்சு தேசத்தினூடாகப் பெல்ஜியத்துக்கும், சென்றமாச இறுதியிலே இங்கிலாந்துக்கும் கொண்டுசெல்லப்பட்டிருக்கிறது. அங்கே இது தென்கரையிலிருந்து வடபாகதுறைமுகம் ஒன்றுக்கு விசாரணைப்பங்குகள் வழியாகக் கொண்டுபோகப்பட்டுப் பின்னர் அயர்லாந்துக்கும், அமெரிக்க ஐக்கியதேசத்துக்கும் அனுப்பிவைக்கப்படும். நமது இரட்சாபெருமான் அறையுண்ட உண்மையான திருச்சிலுவையின் திருப்பண்டம் ஒன்றை அடக்கிய இச்சிலுவையானது பலஸ்தீனுவிலிருந்து அடைக்கலம் புகுந்திருக்கும் சனங்களின் நிதிக்குப் பணம் சேகரிப்பதற்காக ஓர்கூட்டம் பெல்ஜியர்களால் மத்தியகிழக்கு-ஐரோப்பியநாடுகளினூடாகக் கொண்டு செல்லப்படுகிறது.

### சீரியாவும் வத்திக்கானும்

சீரியநாட்டு அரசாங்கம் பரிசுத்தஸ்தானத்துடன் இராசியஉறவை ஏற்படுத்தி வத்திக்கானிடமாகத் தனது முதற் பிரதிநிதியாகத் திரு. பறிட் சாலாவி எனும் கத்தோலிக்க பிரமுகரைத் தெரிந்து அனுப்பி வைத்திருக்கிறது. இவர் அராபிய பாஷையிலே திவ்வியபூசை நிறைவேற்றும் மெல்க்கிய திருச்சடங்குஆசாரமுறையைச்சேர்ந்த ஓர் கத்தோலிக்கர். சீரியாவின் முப்பது லட்சம் குடிசனங்களில் மிகப்பெரும்பான்மையினர் முஸ்லீம்களே. அங்குள்ள 7 லட்சத்து 30 ஆயிரம் கிறீஸ்தவர்களில் 3 லட்சத்து 75-ஆயிரம் பேர் கத்தோலிக்கர்.

### நாற்பது கோடிகத்தோலிக்கர்

உலகில்வாழும் ஒவ்வோர் பதினேழு பேரிலும் ஒருவர் வீதம் கத்தோலிக்கராய் இருப்பதாகச் சுவிற்சர்லாந்து தேச குருமாரால் பிரசுரஞ்செய்யப்படும் "சுவிஸறிஸ்ச்கேர் சென்செயிற்றங்" எனும் சஞ்சிகை கணக்கிட்டுக்கூறுகின்றது. உலகின் மொத்தக்குடிசனத்தொகையாகிய 232 கோடி மக்களில் கத்தோலிக்கரின்தொகை 40 கோடிக்கு மேற்படமாட்டாதென்றும், ஆபிரிக்காவிலே தற்போது வருடந்தோறும் பத்து லட்சம் பேர் வரையில் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்து கொண்டுவருகிருர்களென்றும் அச்சஞ்சிகை தெரிவிக்கின்றது.

---

## நீந்தப் பழகவேண்டும்

வனராசன்கதைகளைச் சித்திரிக்கும் சினிமாப்படங்களிலே தார்ஸனுகநடித்திருப்பவர் யார்? அவர்தான் ஜொன்னி வெய்ஸ்முல்லர். நீங்கள் உங்கள்தேகத்தை எப்படி ஆரோக்கியத்துடனும், உறுதியுடனும் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுபற்றி அவர் கூறியுள்ள சில கருத்துக்களைக் கீழே காண்க.

நீந்துவதில் மகாநிபுணரான இவர் கூறுகிருர்: "நீங்கள் செய்யவேண்டியது ஒன்றுண்டு. அது நீந்துவதுதான். அது உலகமேகண்டு மலைக்கத்தக்க அழகிய தேகக்கட்டை உங்களுக்கு அளிக்கும். இந்தஇரகசியத்தை முதலில் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

நான்குழந்தையாக இருக்கும்போது அதிகப்பலத்தைப் பெற்றிருக்கவில்லை. தேகாப்பியாசம்செய்யும்படி டக்றர் ஆலோசனைகூறினுர். ஆனுல்நானுேசோம்பேறி. பெரியபாரங்களைத் தூக்கிப் பலத்தை ஏற்றிக்கொள்ளுவதையோ, அல்லது தாண்டியும் ஓடியும் அப்பியாசம்செய்வதையோ விரும்பவில்லை. கடைசியாகநான் நீந்தப் பழகிக்கொண்டேன். அது எனக்குச் சுலபமாகியது. நன்கு நீந்திப்பழகிவிட்டால் நீங்கள் சலதோஷத்தால் பாதிக்கப்படமாட்டீர்கள். அத்துடன் நெஞ்சும் அகன்றுகொடுக்கும். உறுதிபெற வழியும் பிறக்கும். சலத்திலே கழுத்துவரையில் ஆழ்ந்துநிற்கும்போது பழக்கமில்லாதவர்கள் மூச்சுவிடத் திணறுவார்கள். சுவாசாசயத்தை வலுப்படுத்தி அவர்களைச்சுற்றியுள்ள சலத்தின் வேகத்தைஎதிர்த்து மூச்சுவிடவேண்டியிருக்கிறது. சலத்தில் நீந்திமுடிந்ததும் உடனே கரையேறுவது சரியல்ல என்று எனக்குப் பயிற்சிஅளித்தவர் கூறியிருக்கிருர். மறுபடியும் சாதாரணமான நிலையில் சுலபமாக மூச்சுவிடும் வரையில் சலத்திலேயே நின்றுவிட்டுக் கரையேறுவதுதான் நல்லது.

"சாதாரணமாக ஒருமனிதன் சரியானபடி ஆழ்ந்துசுவாசிப்பதில்லை. எப்பொழுதாவது திடீரென்று ஏற்படும் நிலைமையிலும், பெரியவிபத்து நேர்ந்தபோதிலும், அல்லது றெயிலுக்கு அவசரமாகப்போகும்சமையத்திலுமே மனிதன் சுவாசாசயத்தின் அடிப்பாகம் தாக்கக்கூடிய முறையில் அழுத்தமாக மூச்சுவிடுகிருன். அதன்பின் நெடுமூச்செறிகிருன். அதன் மூலம் சாதாரணமாகச் சுவீகரித்துக் கொள்வதற்குமேலாக அதிகஅளவான பிராணவாயுவை உட்கொள்ளுகிருன். அதன்விளைவாகக் களைப்புற்றவன் போலும் நோயால் பாதிக்கப்பட்டவன் போலும் மாறிவிடுகிருன். கிறுகிறுப்பினுல்அவன்பெரிதும்பாதிக்கப்படுகிருன். அவனுடைய சுவாசாசயத்தின் அடிப்பாகத்திலிருந்து கிளம்பும் ஒருவகை வாயுவின் தாக்குதலினுலேயே இந்தக் கிறுகிறுப்பு உண்டாகிறது.

"தினமும் காலையிலே ஒவ்வொருவரும் பத்துமுறை பலமாக மூச்சுவிடும் பயிற்சியைப் பழகிக்கொள்ள வேண்டும். நன்ருக ஆழ்ந்து மூச்சுவிட வேண்டும். அப்போது சலதோஷம் அணடாது. உடலுக்கு யாதொரு நோயும்வராது. என்னைப்போல நல்ல தேகத்தை எல்லோரும் பெறலாம்.

நீந்துவதைத்தவிர வேறு தேகாப்பியாசங்களை நான் விசேஷமாக மேற்கொள்வதில்லை. "நீந்துதல் உங்கள் சுவாசாசயத்தைப் பலப்படுத்துகிறது. அத்துடன் உங்கள்தேகத்திலுள்ள தசைநார்களுக்குச் சரியானவலுவையும் ஏற்றுகிறது. நீந்தும் வழக்கம் உங்களுக்கிருந்தால்வேறுதேகப்பயிற்சியை நீங்கள் செய்யவேண்டியதில்லை. ஒவ்வொருவரும் அவசியம் நீந்தப்பழக வேண்டும். பள்ளிக்கூடங்களிலேபடிக்கவும், எழுதவும் கற்றுக்கொடுப்பது போல் நீந்தவும் கற்றுக்கொடுக்கவேண்டியது அவசியமாகும். நீந்தத் தெரிந்திருந்தால் அது உங்கள்உயிரை 'இன்சூர்' செய்வதற்கொப்பாகும். படகில் போகும்போது ஆபத்து ஏற்பட்டால் நீந்தத் தெரிந்தவர்கள் அஞ்சவேண்டியதில்லை. உயிரைக் காப்பாற்றிக்கொள்ளலாம்.

"நீந்தத்தெரியாதவர்கள் நீந்தக் கற்றுக்கொள்ள விரும்பலாம் அல்லவா? அவர்களுக்குநான்கூறும் ஆலோசனை இதுதான். இந்தத்தேகத்தினுள் காற்று இருக்கும்வரையிலே இயற்கையில் அதுமிதக்கிறதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஆழ்ந்த முறையில் சுவாசியுங்கள். மூச்சை அடக்குங்கள். சலத்தின்மீது அப்படியே படுத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது சுலபமாக நீங்கள் மிதக்கலாம். மூச்சைவிட்டதும் உங்கள் தேகம் தண்ணீரில்அமிழ்ந்திவிட ஆரம்பிக்கும். நாம்தரையிலே இருக்கும்போது எத்தகைய சிந்தனையுமின்றிச் சர்வசாதாரணமாக மூச்சுவிடுகிருேம். ஆனுல், சலத்திலேஇருக்கும்போது மூச்சுவிட முதலில் விசேஷமுயற்சியை மேற்கொள்ளவேண்டும். அதேசமயத்தில் சுவாசாசயத்தில் விரைவிலே காற்றைக் கிரகித்துக்கொண்டு பிறகு வெளியே விடவேண்டியிருக்கிறது. சலத்தில் இருந்தபடியே மூச்சுவிடப் பழகிவிட்டால் அப்புறம்அதிகமாய்ச் சிரமம் இருக்காது. என்தேகத்தைக் கட்டுமட்டாகவும்,அழகாகவும் அமைத்துக்கொள்ள எனக்குச் சுமார் பத்து வருடம்நீந்தும்பயிற்சியைமேற்கொள்ள வேண்டிவந்தது. ஒருநாளைக்கு மூன்று மணிநேரத்தை நான் நீந்துதலில் செலவழித்திருக்கிறேன்."

### இந்தோனேஷிய குடியரசு

இந்தோனேஷிய குடியரசுக் கட்சிக்கும் டச்சுஅரசாங்கத்துக்குமிடையே ஏற்பட்ட தற்காலிக ஒப்பந்தத்தின்படி ஜோக்ஜகர்த்தாவிலிருந்து டச்சுப்படைகள் வெளியேறிவிட்டன. ஆனி மாதம் 30-ந்திகதியன்று இந்தோனேஷிய குடியரசுக்கட்சி ஜோக்ஜகர்த்தாவில் பதவியேற்றது. குடியரசுச்சார்பில் ஜோக்ஜகர்த்தா சுல்தான் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். குடியரசுக்கட்சியின் 16 மந்திரிகளும் சென்ற வருடம் டச்சுத் தாக்குதலின் விளைவாகப் பலவிடங்களுக்கும் பிரிந்துபோய்விட்டனர். ஆனி மாதம் 30-ந்தேதியன்று அந்த 16 பேர்களில் 5 பேர்களே ஜோக்ஜகர்த்தாவில் இருந்தனர். மற்றவர்கள் ஆடி முதல் வாரத்தில் வந்துசேருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

—வத்திக்கான் இராச்சியத்திலே பரிசுத்த பாப்பரசரின் சுவிஸ் காவலாளருள் அதிகம் இளவயசுள்ளவர் 13 வயசுடையவரான கார்லோ றுப்பென் என்பவரே. இவர் பாப்பரசின் பட்டாளங்களிலே ஓர்படைஉத்தியோகஸ்தரான லெவ்ரினட்-கேணல் அல்றிகோ றுப்பென் அவர்களின் புதல்வராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானமலர்க்கொத்து

**என் மகனைக் காப்பாற்றும்:** தேக்குவா நாட்டுஸ்திரீ தாவீதுஇராசாவிடம்சென்று பிரலாபித்துஅழுது: "அரசே, எனக்குஇரண்டுகுமாரர்கள் இருந்தனர். ஒருவன் மற்றொருவனைக் கொன்றுபோட்டான். ஊர்க்காவலர் உயிரோடிருக்கிறவனை நியாயஸ்தலத்துக்கு இழுத்துக்கொண்டுபோய் மரணத்தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். ஏற்கனவே ஒருபிள்ளையை இழந்துவிட்டேன். இன்னும் எனக்கிருக்கும் ஏகபுத்திரனை இப்போது இழக்கப்போகிறேன். என் மகனைக்காப்பாற்றும்" என்று பிரார்த்தித்தாள். அவளுடைய பரிதாபகர நிலைமையைக் கண்ணுற்ற சகலரும் மனதுருகினர். தாவீதுமன்னர் அவளைப்பார்த்து: "உன் மகன்சாகமாட்டான், பயப்படாதே" என்றார். அக்ஷணமே கொலைபாதகனின் குற்றத்தை மன்னித்துச் சிறையினின்றும் அவனைமீட்டுத் தாய்வசம்ஒப்புவித்தார். பாவிகளுக்குஅடைக்கலமாகிய பரமநாயகிக்கு இந்தத் தேக்குவாஸ்திரீ ஓர் உவமானம். மாமரியின்மூத்தமகனாகிய யேசுவைச் சிலுவையிலறைந்து கொன்றது நான்தான். என்பாவமே அவருடைய மரணத்துக்குக்காரணம். நான் மாதாவின்பிள்ளை. யேசுவின்சகோதரன். சகோதரனைக்கொன்ற கொலைபாதகனாகிய என்னைச் சர்வேசுரனுடைய கோபாக்கினையினின்று காப்பாற்ற அவரை அணுகி: "ஆண்டவரே, என்மகனைக்காப்பாற்றும்" என்று அபயமிட்டு மன்றாடுகிறாள். மாதாவின் மன்றாட்டைக்கேட்டுச் சர்வேசுரன் என்பாவங்களைப்பொறுத்து என்னைநித்தியநாக ஆக்கினையினின்று காப்பாற்றுகிறார். ஒருமுறை இருமுறையல்ல, பலமுறை பாவம்செய்து தேவதண்டனைக்குஆளாயிருந்த என்னைக்காப்பாற்றிய ருளிய என் அன்புள்ள அன்னையை ஒருபோதும்மறவேன். "மாதாவின்பிள்ளை ஒருபோதும் அவலமாய்ச்சாகாது."

**திடனளிக்கும் தெய்வீக மன்னு:** தொமஸ்மோர் ஆங்கிலேயஅரசனின் பிரதமஅமைச்சன். அடிக்கடி திவ்விய சற்பிரசாதம் அருந்தும் சுகிர்தவழக்கம் அவருக்கிருந்தது. அவருடையநண்பர்கள் அவரிடம்சென்று: "பிரபுவே, உமக்கு அரசியல்வேலை அதிகம்; தினம் திவ்வியபூசைகண்டு தேவநற்கருணை வாங்கி உமதுநேரத்தை வீணில்விரயமாக்கலாமா? நீர்குடும்பஸ்தனுயிருப்பதால் உமதுகுடும்பகவலைகளைக் கவனித்துக்கொள்ளவேண்டியவர்; கோவிலில் காலைநேரத்தைப்போக்கினால் குடும்ப கடமைகளை நிறைவேற்றுவது எங்ஙனம்? அரசியல்வாதிகளோடும், சாமான்ய மக்களோடும் நீர்பேசிப் புழங்கிவருவதால் சோதனைகளுக்குக் குறைவிராது; இந்தநிலைமையில் தாங்கள் அடிக்கடி திவ்வியநன்மை வாங்குவது தகுமா?" என்றனர். பக்திவிசுவாசமுள்ள பிரதமர் தமதுநண்பர்களை நோக்கி: "பிரபுக்காள், எனக்கு அரசியல்வேலைகள் நிரம்பஇருப்பது வாஸ்தவம்; அவ்வேலைகளைச் செவ்வனே செய்துமுடிக்கத் தினமும் என்புத்திக்குப் பிரகாசமும், மனதுக்குப்பலமும் அளிப்பது திவ்விய சற்பிரசாதமே. குடும்பவேலைகள் அதிகம்; அவற்றை நிறைவேற்ற ஊக்கத்தையும், அமைதியையும் சற்பிரசாதநாதரிடமிருந்து அடைந்துகொள்ளுகிறேன். என்ஆத்துமநோய்களைக் குணப்படுத்தும் சர்வரோகநிவாரணி சற்பிரசாதமேயன்றி வேறெதுவுமில்லை. அற்பமனுஷனாகிய எனக்குவரும் சோதனைகளைச்செயிக்க எனக்குத்திடனளிக்கும் பரமஅவுழ்தம் இந்தத் தெய்வீகமன்னாவே" என்று மொழிந்தார்.

**மனுஷனின் லட்சியம்:** போலாந்துதேச இராசப்பிரபுகுலத்தில் பிறந்தபிள்ளை ஒருவன் இருந்தான். சிறுவத்திலிருந்தே பக்திவிசுவாசமுள்ளவன். இவ்வுலகபொருட்களை விழலென்றெண்ணி அலட்சியம்செய்தவன். 15 பிராயமானதும் தனது சொத்துசுதந்தரங்கள் யாவற்றையும்துறந்து சந்நியாசசபையில் தரித்திரசீவியம்சீவிக்க நேர்ந்துகொண்டான். இதனையறிந்த பிரபுகுலவாலிபநண்பர் அவனிடம் சென்று: "தம்பி, நீ இராசபிரபுகுலத்தில் உதித்தவன்; அதேதாபார், உனக்குச்சொந்தமான மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், கண்ணுக்கெட்டாததூரம் அகன்றுவிரிந்து பரந்து கிடக்கும்பூஸ்திதி! திரளானதிரவியம்! இவையெல்லாம் உன்னுடையவை. இவ்வளவுசுகபோகங்களை மனங்கொண்டவரை அனுபவித்து இவ்வுலகில் உற்றார்உறவினருடன் சொகுசாய் வாழலாமே" என்றனர். அப்போது இளைஞன்: "நண்பர்காள், வாஸ்தவம்; எனக்கு ஏராளமானசம்பத்து உண்டுதான்; ஆனால், இவ்வுலகபாக்கியங்கள் யாவும்பகட்டானவை, அழிவுக்குரியவை; பரலோகபாக்கியத்துக்கு முன் இவைகளெல்லாம் விழலுக்குச்சமானம்; இவ்வுலகில் நமது நல்லதந்தையாகிய சர்வேசுரனை அறிந்து நேசித்துச் சேவித்து மறுவுலகில்அவரை நித்தியத்துக்கும் சுகித்தநுபவிப்பதே மனுஷனுடையலட்சியம்; இதுவே மானிடசீவியத்தின் மகத்தானபாக்கியம்! நானோ இம்மகத்தான சொத்துக்களைச் சுகித்தநுபவிக்கப் பிறந்தவன்" என்று பதிலிறுத்தான். இந்தப்பையன் தனது 17-ம் பிராயத்தில் தாய்தந்தையர், உற்றார்உறவினர், உலகசுகபோகங்கள் யாவற்றையும் விட்டொழித்து, யேசுசபையில்சேர்ந்து நவசந்நியாசியாகி மோட்சபாக்கியம்பெற்றான். திருச்சபை இந்த இளைஞனுக்கு அர்ச்சியசிஷ்ட பட்டமளித்து இவரை வாலிபருக்குப் பாதுகாவலனாக நியமித்திருக்கிறது. இந்த அர்ச்சியசிஷ்ட வாலிபனின்நாமம் ஸ்தனிஸ்லாஸ் கோஸ்றகா.

**சீப்பியோவின் தங்கப் பதக்கம்:** பூர்வகாலத்தில் பெரியபட்டணமொன்றில் விநோதவழக்கம் ஒன்றிருந்தது. இராசாவின்மகன் இளைஞனாயிருக்கையில் தன்மார்பில் தங்கப்பதக்கம்ஒன்று அணிந்துகொள்வான். அந்தப்பதக்கம் இருதயவடிவமாய் அமைந்தது. அதன் மேற்புறத்தில் இராசாவின் பிரதிமையும், பின்புறத்தில் கோமகனின்சாயலும் பதிக்கப்பட்டிருந்தன. இராசகோத்திரத்துக்கு அவமானம்வருவிக்கும் எவ்விதகிரிகையையும் செய்யலாகாதென்று இராசகுமாரனுக்கு நினைப்பூட்டுவதே இப்பதக்கத்தின் நோக்கம். சீப்பியோஎன்னும் கோமகன் அக்காலத்துவழக்கத்தை அநுசரித்துத் தங்கப்பதக்கம் அணிந்திருந்தான். ஆனால், முறையற்ற தனது துர்நடக்கையினால் தந்தைக்கும், இராசகுலத்துக்கும் அவமானம் வருவித்தான். நீதிதவறாது செங்கோல் செலுத்திவந்த அரசர் தன் மகனைக் கொலுமண்டபத்துக்கு அழைத்து, அவன்மார்பிலிருந்த தங்கப்பதக்கத்தை அகற்றிவிட்டார்.

நீதிவழுவாது நியாயம்தீர்க்கும் இராசாதிராசன் சர்வேசுரனே. ஞானஸ்நானத்தில் உன்னைத் தம்புத்திரனாக ஏற்றுக்கொண்டு அதன்அடையாளமாகத் தேவஇஷ்டப்பிரசாதம் என்னும் தங்கப்பதக்கத்தை உன்ஆத்துமத்தில் பதிப்பிக்கிறார். பாவத்தினால் இந்தப் பதக்கத்தை இழந்துவிடுகிறாய்; சர்வேசுரனுடைய பிள்ளைஎன்னும் சுதந்திரமும் போய்விடுகிறது. அத்துடன் அவருடைய சொந்தவீடாகிய நித்திய மோட்சத்துக்குள் பிரவேசிக்க உனக்கிருந்த உரிமையையும் இழந்துவிடுகிறாய். சர்வேசுரன் உன்னைத்தம்மகன் என்று அங்கீகரிக்கமாட்டார்.

சே. தி. இ. தூதன்.

---

—தென்நியூகினியாவிலே காட்டுப்பிரதேசம் ஒன்றில், இதுவரை கண்டறியப்படாமலிருந்த ஒருபகுதியில் இரு உலாந்த கத்தோலிக்க மிஷனரிமார் புதிதாக ஓர் ஆற்றைக்கண்டறிந்து அதற்கு உலாந்த யூலியானா இராணியாரின் நாமத்தைச் சூட்டியிருக்கின்றார்கள்.

## துணை மேற்றிராணியாருக்கு இளவாலையில் வரவேற்பு

சென்ற 16-ந்திகதி சனிக்கிழமை காலை சூரியன் தனது சுடர்களைஎறிந்து கொண்டு கீழ்த்திசையில் எழுந்தான். அவ்வேளை எங்கள் ஞானசூரியனும், யாழ்ப்பாணத்திருச்சபையின் புதிய இளவரசுமான மகாவந். J. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்கள், இளவாலையின் தென்கீழ்த்திசையில் எழுந்தருளினார். வாத்தியங்கள் இசைத்து வாழ்த்துரைக்க, மணிகள் ஆர்ப்பரித்து வரவேற்க இப்பதிவாசிகளெல்லோரும் ஏகமாகத்திரண்டு எதிர்கொண்டு சென்று ஆடம்பரமாக அவரை அழைத்துவந்தனர். அவருக்கு மலர்மாலைகள் சூட்டப்பட்டன. ஒலிபெருக்கியின் வரவேற்பு பக்தர்கூட்டத்தில் உச்சஸ்தாயில் இருந்தது. ஆண்டவர்அவர்களால் திவ்வியபூசை நிறைவேறியதும் கோயில் முன்றிலில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரபந்தரில் பகிரங்கஉபசாரணை நடைபெறலாயிற்று.

அவர் குருமனையிலிருந்து அழைத்துவரப்பெற்று உயராசனத்தில் அமர்ந்தார். அவரின் இருமருங்கும் வண. கட்டளைச்சுவாமியார், வண. B. A. யோண்சுவாமியார், வண. P. J. சீவரத்தினம் சுவாமியார் உட்படப் பல குருமார் புடைசூழ்ந்திருந்தனர். அவ்வேளை அவர் பலராலும் மலர்மாலைகள் சூட்டப்பெற்றனர். எள்ளிட இடமின்றிச் சனத்திரள் தேங்கியிருந்தது. வண. கட்டளைச்சுவாமியார் இரத்தினச்சுருக்கமாகச் சிலகுறிப்புகள் எடுத்துக்கூறினர். பின்பு ஆசிரியர் S. சந்தியாப்பிள்ளை வந்தனோபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுத்தனர். அழகுற்று விளங்கும் மணிமண்டபம்போலும் பத்திரமானது கண்டோர் கண்களைக்கவர்வதாயிற்று. பின்பு ஆசிரியர் S. அடைக்கலமுத்து அவர்கள் எழுந்து, ஆண்டவர் அவர்களின் அருந்தொண்டுகளையும், அவரது இன்பகரமான இயல்புகளையும், அவர் மேற்றிராணித்துவ பதவி ஏற்றகாலத்தையும் பற்றி நகைச்சுவைபொருந்திய ஒருசொற்பொழிவு நிகழ்த்தினர். தொடர்ந்து ஆசிரியர் S. தேவசகாயம் அவர்கள் மேற்றிராணித்துவபதவியின் மேன்மையையும், இளவாலைப் பாடசாலைகளின் விசேஷத்தையும்பற்றி விரித்துரைத்தனர். ஆண்டவர்அவர்கள் எழுந்து தாம் ஏழைகளின் நண்பராயிருக்க ஆவல்கொள்வதாகவும், விசுவாசமுடைய ஞானச்சீவிய அத்திவாரத்தில் நாம் சீவிக்க வேண்டுமென்றும், குருமாருக்குப் பணிவும், அமைச்சலும் காட்டவேண்டுமென்றும் பல எடுத்துக்காட்டுகளுடன் பேசினின்றார். ஈற்றில் அவரின் திருக்கரஆசியோடு வரவேற்புக் கொண்டாட்டம் பூர்த்தியாயிற்று. அன்று குருமனையில் மக்கள் சார்பாக ஒருவிருந்து உபசாரணை நடைபெறலாயிற்று.

—கடிதர்.

## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் அச்சுவேலிக்கிராமப் புனருத்தாரணத் திட்டத்தின்கீழ் இருபத்திரண்டு (22) கிணறுகள் வெட்டிக்கட்டுவதற்கு 1949-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ந்திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிவரைக்கும் கொழும்பு கிருஷிகப்பகுதி டெண்டர் போட் தலைவர் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

குறித்த விண்ணப்பப்பத்திரங்கள் ரூபா 50/- கச்சேரியில் அல்லது கொழும்பு திறைசேரியில் கட்டிய ஒவ்வொருபற்றுச்சீட்டிற்கும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமாக, வடமாகாண ஏசண்டர் அவர்களிடமிருந்து 1949-ம் ஆண்டு ஜூலைமாதம் 23-ந் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிக்குள் பெற்றுக் கொள்ளவேண்டும். மறுவிபரங்களை யாழ்ப்பாணக்கச்சேரி வடமாகாண ஏசண்டரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கச்சேரி யாழ்ப்பாணம். 2-7-49.

பீ. ஜ. கட்சன் வடமாகாண ஏஜண்டர்

---

## கலா ஓயா, அநுராசபுரம்

கலாஓயா அர்ச். லூர்துமாதா பெருநாள் ஆவணி முதல் ஞாயிறு 7-8-49-இல் கொண்டாடப்படும். ஆடி மாசம் 28-ந் திகதி கொடியேற்றம்.

FR. S. A. SWAMPILLAI, Parish Priest

---

## ஆபிரிக்க கத்தோலிக்க அரசர்

ஆபிரிக்காவிலே பெல்ஜிய கொங்கோவைச்சேர்ந்த றுவண்டாநாட்டின் அரசரான முத்தார றுடாகிகாவா மன்னர் சமீபத்திலே பெல்ஜியத்தில் சுற்றுப்பிரயாணஞ் செய்துகொண்டிருந்தபோது, வழமைக்கு மேற்பட்ட அவரது உயர்ந்ததோற்றத்தையும், மெலிந்த உடலையும், கத்தோலிக்க சமயப்பற்றையும் கவனித்து அத்தேசமக்கள் பெரிதும் மனவருட்சி கொள்ளலானார்கள். இற்றைக்கு ஆறுவருடங்களின் முன்னர் தமது 33-ம் வயசில் இவர் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்து கொள்ளலாயினர். அவ்வாறு சேருமுன் அந்நாட்டில் வழங்கிவந்த பலதாரவிவாக வழக்கத்தைப் பகிரங்கமாக விலக்கி ஒழித்துவிடலாயினர். பலநூற்றாண்டுகளாக அங்கே இருந்துவந்த இத்துர்வழக்கத்தை ஒழித்துவிடமுனைந்தமையானது அரசரின் வீரத்துவத்துக்குப்போந்த ஓர்சான்றாகும். தமது பிரசைகளுக்கெல்லாம் இவர் ஓர்உண்மையான பிதாவாய், அவர்களது நல்வாழ்வின்மட்டிலேயே என்றைக்கும் கருத்தாய் இருந்து வருவதாகப் பெல்ஜியமிஷனரிமார் கூறுகின்றனர். இற்றைக்குச் சுமார்ஐம்பதுவருடங்களுக்கு முன்னரே றுவண்டா நாட்டில் கத்தோலிக்க மிஷனரிமார் பிரவேசித்தனர். என்றாலும் அது 81 சுதேச குருமாரைத் தற்போது சொந்தமாகக் கொண்டிருக்கிறது.

---

# சத்தியவேத பாதுகாவலன்

**Supplement to the Catholic Guardian**

வியாழக்கிழமைகளில் பிரசுரமாகும்

**கையொப்ப விகிதம்**

முற்பணமாகக் கட்டவேண்டும்

| தமிழ் | | இலங்கை | தமிழும், இங்கிலிசும் | |
|---|---|---|---|---|
| வருஷம் | 5-50 | | வருஷம் | 10-50 |
| அரை வருஷம் | 3-00 | | அரை வருஷம் | 5-50 |
| | | மற்றும் தேசங்களுக்கு | | |
| வருஷம் | 6-00 | | வருஷம் | 11-00 |
| அரை வருஷம் | 3-25 | | அரை வருஷம் | 5-75 |

விளம்பரங்களுக்கும், கையொப்பங்களுக்கும், மனேஜர் அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம் என்று எழுதவேண்டும்.

மற்றும் விஷயங்கள்பற்றி, பத்திராதிபருக்கு எழுதவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அறிக்கை

குருநகர் சந்தியோகுமையோர் ஆலய வருடாந்த விழாக்கள் சென்ற 16-ந் திகதி தொடங்கி நடைபெற்று வருகின்றன. சந்தியோகுமையோரின் திருநாட்பூசை வரும் 25-ந் திகதி திங்கட்கிழமை காலை 7-30 மணிக்கு நடைபெறும்.

சாயந்தரம் 4-30 மணியளவில் வழமைபோல சுற்றுப்பிரகாரம் நடைபெறும். 24-7-49 ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் கடலணைமைதானத்தில், யாழ்ப்பாணப் பிரபல கத்தோலிக்க அண்ணாவிமாரல் தேவசகாயம் பிள்ளை நாடகம் நடித்துக் காண்பிக்கப்படும்.

கட்டளைக்குரவர்

## திருநாள் அட்டவணை

**1949-ம் ஆண்டு ஆடி மாதம்**

| | | |
|---|---|---|
| வெ | 22 | அர்ச். மரியமதலேனம்மாள், தவத்தாளி [வே. |
| சனி | 23 | அர்ச். அப்பொல்லினூர், மே. |
| ஞா | 24 | இஸ். ஆகமனத்தின் பின்வரும் 7-ம் ஞாயிறு—அர்ச். கிறிஸ்தீனம்மாள், க. வே. |
| திங் | 25 | அர்ச். யாகப்பர், அ. |
| செ | 26 | அர்ச். அன்னம்மாள், |
| புத | 27 | அர்ச். பந்தலேயோன், வே. |
| வியா | 28 | கூட்டாளிகளான அர்ச். நசாறி; இன்னோசெஞ்சியார், பா. |

சத்தியவேத
பாதுகாவலன்
1949-ம் ஆண்டு
ஆடி மாசம் 21-ந் திகதி

## மருதமடுத் திருப்பதியின் மங்காப் பெருமை

மருதமடுத் திருப்பதியின் நடு நாயகமாய்க் கிருபாசனங்கொண்டு எழுந்தருளித் தமது சலிகையைத் தேடிவருகின்ற பக்தகோடிகளுக்கெல்லாம் மழை மாரிபோன்றுஅருள்மாரி பொழிந்து வராநின்ற பரிசுத்த செபமாலைநாயகி திருமுடிசூடிய வெள்ளியூபிலிவிழாவை நாமும் கண்குளிரக்கண்டு ஆனந்தபரவசமெய்தக் கருணைபாலித்த பெருந்தயவிற்காக அவர் திருவடிக்கமலங்களுக்கு நமது மனமார்ந்த நன்றியறிந்த தோத்திர நமஸ்காரங்களைச் சமர்ப்பிக்கின்றோம். இற்றைக்கு ஐயைந்து ஆண்டுகளின்முன் ஆடிமாதம் 2-ந்தேதியன்றுகாலை அங்கு திருக்ஷேத்திரத்தின்முன்பாக எழிலுற்றுவிளங்கிய மணிமாமண்டபத்திலே, அழகேமயமாய் இலங்கிய சிங்காரபொற்சிம்மாசனத்திலே மகிமைப்பிரதாபத்துடன் எழுந்தருளியிருந்த செபமாலை இராக்கினியின் அற்புத் திருச்சுரூபத்துக்குப் பரிசுத்த பாப்பாண்டவரின் நாமத்தினலேசூட்டிவைக்கும்படியாய் நவரத்தினங்கள்பதித்து, அரியவேலைப்பாடுடையதாய்ப் பசும்பொன்னால் இழைத்துக் கவினுற்றுப் பளீரிட்டொளிர்ந்த திருமாமணிமுடியை நம் மேற்றிராணியாண்டவர் அவர்கள் பாப்பாண்டவரின்பிரதிநிதியாகஅனுப்பப்பெற்றுவந்த மகா மேன்மைதங்கியகுடேர்ஆண்டவரதுகரங்களில்மிகுந்தபூச்சியமாக எடுத்துக்கொடுத்த இங்கிர்த காட்சியும், அவர்பெரிதும் உணர்ச்சிததும்ப அதனைப்பெற்றுத் தமதுஇருகரங்களாலும் ஏந்திநின்ற இன்ப மனோகர காட்சியும், அதன்மேல் பாண்டு வாத்தியங்கள் இசைக்க, மணிகள் ஆர்ப்பரிக்க, அம்மணிமா மண்டபத்தின் மூப்புறங்களிலும் சமுத்திரம்போலத் தேங்கிநின்ற பக்தர்குழாம் இருகரமெடுத்து மனதாரவாயார மாதாவை வணங்கித்துதித்து ஆனந்தபாஷ்பஞ்சொரிந்து நிற்க, அதிமேற்றிராணியாண்டவர் மகாஆசாரபக்திவணக்கத்துடன் அத்திருமுடியைத் திருச்சுரூபத்தின்சிரசில் சூட்டிய மங்கல மனோகரகாட்சியும், அத்தருணம் தூத்துக்குடி மேற்றிராணியாண்டவர் தேமாரிபொழிந்த வாருகச் செய்தருளிய அமிர்த பிரசங்கத்தை மக்களெல்லாம் ஆர்வத்துடன் கேட்டுநின்ற ஆனந்தகாட்சியும், அநேகமேற்றிராணிமார்,குருப்பிரசாதிகளின் பிரசன்ன பெருமிதக்காட்சியும், பொதுவிலே அம்மங்கலசுபதின மன்று ஓர் இராசமா நகரம் போன்று மருதமடுத்திருப்பதி அளித்துநின்ற அபூர்வ அலங்கிர்த காட்சியும் ஆதியனவெல்லாம் இன்றைக்கும் நமது கண்முன் இன்றே நிகழ்வன போல் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. இந்த அருட்காட்சிகளாகும் அருங்காட்சிகளின் ஞாபகம்ஓர்காரணம். இத்துடன் மடுத்திருநாயகி தமதுகிரீட தாரண வெள்ளிவிழாவுக்குமுன்னதாகச் சென்றவருடம் ஊரூராக வந்து எம்மைச் சந்தித்துப்போக தயைகூர்ந்தருளினூரே என்ற ஞாபகம் மற்றோர் காரணம். இவ்விரண்டும் எமது உள்ளத்தில் இடையருதெழுந்து அவரின் திருப்பதிக்கு யாத்திரைபோக வேண்டுமென்ற தணியாதவாஞ்சையை உண்டுபண்ணிவிடவே நமது சுகத்தாழ்வையும் பாராது அவரில் நம்பிக்கைவைத்துக் கடைசிவேளை அங்கு யாத்திரை சென்றோம்.

யூபிலிவிழாவிற்கு முதனாள் வெள்ளிக்கிழமை சாயந்தரம் அப்புனிதபுண்ணியதலத்தைப்பய பக்தியுடன் அணுகியதும் அங்கு வாயிலிலே திருக்குழந்தை மகனைரச்செங்கரத் தேந்தியணைத்த பாவனையாயிருந்த மாதாவின் அழகான பெரிய திருச்சுரூபமானதுபுன்முறுவலுடன்நம்மை வரவேற்பதுபோல் காணப்பட்டது. அதனால் அதன்முன்பாகக் கைகுவித்துமுழந்தாட்படியிட்டுச் சிறிதுவேளை செபஞ்செய்தபின் உள்ளே பிரவேசித்துக் கண்ணுற்றபோது மடுப்பதி முன்னில்லாத ஓர்நவப்பதியாகவே காட்சியளித்துநின்றது. அப்பதிமுழுவதும் யாத்திரிகளால் ஒரே சனத்திரளாய்த் தேங்கிப்போயிருந்தது. ஆலயமும். அதன் மணிமாடமும், பரந்த மைதானமும், மாதாவின்மங்கலயூபிலிவிழாவை பிரதிபலிப்பனபோல் அத்துணை பெரும் மாட்சியுற்றுத் திகழ்ந்தன. அன்றுமாலைஓர்மகாராணியின் கொலுமண்டபம்போலச் சோபையுற்றுமிளிர்ந்த அம்மணிமாடத்தின்முன்பாக மாலையாராதனைக்கென்று கூடியிருந்த அப்பிரமாண்டமான சனசமுத்திரத்தின் மத்தியில்நிலவிய பத்தியருட்சியும், தமிழ்மொழியில் வண. எஸ். பீற்றர் சுவாமியாரும், சிங்களமொழியில் கொழும்புஅதிமேற்றிராணியாரும் சொல்லின்பம், பொருளின்பம், சந்தஇன்பம்பெருகக் கடைமடை திறந்தாற்போலச் செய்தருளியசிறந்த பிரசங்கங்களைக்கேட்டு மாதாபக்தர்களெல்லாம் பரவசமுற்று மனமுருகியதில் எழுந்த மன எழுச்சியும், மேற்றிராணிமார், குருமார் புடைசூழக் கொழும்பு அதிமேற்றிராணியாண்டவர் மாலையாராதனைபாடிச் சற்பிரசாத ஆசீர்வாதம்அருளியபோது காணப்பெற்ற கண்கொள்ளாக் காட்சியால் உண்டான ஞான உணர்ச்சியும், அதன்மேல் அங்கண் சமூகமாயிருந்த மக்களெல்லாம் ஒரேகுரலாய், ஒரேஇசையாய் "ஆவே மரியா" எனும் கீதத்தைப்பாடிவானுலகுமேஅதிர்ச்சிகொள்ளும்படியாக வானுலகரசியை வாழ்த்திப்போற்றி வணங்கியபோது பிறந்த பெருமகிழ்ச்சியும் ஆதியவெல்லாம் வர்ணிக்குந்தரமன்று.

. அன்பான மருதமடுச் செபமாலை இராக்கினியின் திருமுடிசூட்டுவிழாவைக் காணப் பாக்கியம்பெற்ற நாம் அம்மகாதிருவைபவத்தின் வெள்ளியூபிலி விழாவையும் அப்பதியில் காணும் சலாக்கியத்தைப் பெற்றோம். அங்கு மருதஞ்சோலையின் நிழலில் அமர்ந்து சோகரியந்தரும் தென்றற்காற்றினை மற்றுமோர் தரம் சுவாசித்தோம். மருதமடுத் தெண்ணீர்த்தடாகத்தின் குளிர்ந்த சலத்தில் இறங்கி மற்றுமோர் தரம் தீர்த்தமாடினேம். ஞானமிர்தம் பிறக்கும் மாதாவின் அருட்சுனையில் மற்றுமோர்தரம் அள்ளிப்பருகி ஆனந்தமெய்தினேம். அவரது திவ்விய சந்நிதானத்தை அடைந்து அவர் திருவடித்தாமரைகளில் வீழ்ந்து அம்மா, தாயே என்று மற்றுமோர் அஞ்சலிசெய்தோம். அவரது திருப்பவனிகண்டு மற்றுமோர்தரம் ஞானபரவசமுற்றோம். பொதுவிலே மாதாவின் பதியெங்கும் ஞானனந்த காட்சியே ஆட்சிசெலுத்திநின்றதெனலாம். பயபக்தியான சூழ்நிலையே எங்கும் நிலவியதெனலாம். யூபிலிவிழாமுடிந்தும் மக்கள் கலைந்துசெல்ல இன்னமும் மனமற்றவர்களாய் மாதாவை ஏறெடுத்துநின்றதேஅவர்களின் மிக்கான பக்திபற்றுதலுக்குப் போந்தவோர் சான்றெனலாம். ஆம், ஏறுபொழுதென்ன மாதாவின் மடுப்பதி அடைந்துவரும் பிரஸ்தாபமோபெரிது! சென்ற கால்நூற்றாண்டிலும் அஃது பலவழியாலும் அடைந்துள்ள சீருஞ்சிறப்புமோ மிகப்பெரிது !! அதன் மங்காப்பெருமையை, இங்குஎடுத்து விரித்துக்கூறுவதோ மிகஅரிது! அரிது !!

### பகிரங்க விடுமுறைநாள்

இலங்கையிலே இந்துக்களின் ஆடி அமாவாசைத் தினத்திற்கு (25-7-49) பதிலாக அவர்களின் தீபாவளித் தினமாகிய வருகிற ஐப்பசிமாதம் 21-ந்திகதி ஓர்பகிரங்க விடுமுறைநாளாயிருக்கும்.

## சின்னமடுத் திருநாள்

சாவணை, சின்னமடுப்பதியிலே கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பரிசுத்தசெபமாலைமாதாவின் திருநாள் வழமைப்பிரகாரம் நிகழும் ஆடிமாசம் 27-ந்திகதி கொடியேற்றத்துடன்ஆரம்பமாகி ஆவணிமாசம் 5-ந்திகதி முடிவாகும். யாத்திரிகருக்கு வேண்டிய வசதிகள்யாவும் உண்டு. ஊர்காவற்றுறையிலிருந்தும், பண்ணையிலிருந்தும் ஒவ்வொருநாளும் பஸ்சேவிஸ் உண்டு.

கடைகள்கட்ட விரும்புவோர் முற்பணம்கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டியது.

திருப்பதியில் ஒருவரும் மெழுகுதிரி விற்கப்படாது. கோவில்கணக்கால் விற்கப்படும்.

யாத்திரிகரின் ஞான விசாரணைக்காக யாழ்ப்பாண மேற்றிராணியாண்டவர் அவர்களும் பலகுருமாரும் சமூகமாயிருப்பார்கள். வண. P. நீக்கிலாஸ் சுவாமியாரால் பிரசங்கம் சொல்லப்படும்.

மாதாவின்பக்தர்கள் அனைவரும் திருநாளில் பங்குபற்றி அதனைச் சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கட்டளைக்குரு
நாரந்தனை, ஊர்காவற்றுறை

## சுதேச வர்த்தமானம்

### பெயர்கொண்ட பெருநாள்

அர்ச். ஜெறோம் எமிலியானுஸ் திருநாள். நிகழும்ஆடிமாசம். 20-ந்திகதியாகிய நேற்றுப் புதன்கிழமைவந்து போயிற்று. இது நம் துணைமேற்றிராணியாரான மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவரது பெயர்கொண்ட அர்ச்சியசிஷ்டவர் திருநாளாகும். அதனால் அன்றுகாலை 6-30 மணிக்கு ஆண்டவர்அவர்கள் குருமார், குருத்துவமாணவர் சகிதமாய் ஆசனக்கோவிலுக்கெழுந்தருளிஅங்கே பிள்ளைகளும் பிறருமாகத் திரளானோர் கூடியிருந்தசமுகத்திலே வண. A.J.R. அன்ரோனைஸ் சுவாமியாரும், வண. L. யோசெவ்சுவாமியாரும் துணைபுரியத் திவ்வியபூசை நிறைவேற்றினர். குருமடத்துப் பாடகர்குழாம் இன்ப தேவகானங்கள் பாடிநின்றது. அநேகர் திவ்வியநன்மைபெற்றார்கள். பூசை முடிவிலே பலரும் ஆண்டவர்அவர்களைச் சந்தித்துச் சோபனங்கூறி ஆசிபெற்றுத் திரும்பினூர்கள்.

### தூத்துக்குடிமேற்றிராணியார்

தூத்துக்குடி மேற்றிராணியாராகிய மகாவந். எவ். ரி. றோச் ஆண்டவர் அவர்கள்சுகத்தாழ்வுற்றிருக்கிறரெனச் சென்றவார இறுதியில் இவ்விடம் செய்தி எட்டலாயிற்று. ஓர்ஆஸ்பத்திரிசென்று விசேஷ சிகிச்சைபெறும்படியாக அவருக்கு டக்றர்மார் ஆலோசனை கூறியிருக்கின்றனர். ஆண்டவர் அவர்களுக்குத் தீவிரசுகம்அருள எம்பெருமான் திருவருள் பாலிப்பாராக!

### பிரியதத்த வங்கி

மீசாம், பாடசாலை, கூட்டங்களில் கிழமைதோறும் சேரும் பிரியதத்தம் செபமாலைக் கணக்குகளைத் தவறாது ஒழுங்காக வாராந்தம் "பிரியதத்த வங்கி, மேற்றிாசனமாளிகை, யாழ்ப்பாணம்" என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கும்படி குருப்பிரசாதிகளையும் ஆசிரியர் ஆசிரியைகளையும் கூட்டத்து முதலாளிமார்களையும் விநயமாய்க்கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிரியதத்தவங்கி அச்சுப்பிரதிகள் தேவையென்று காண்போருக்கு உடனே அவைகள் அனுப்பிவைக்கப்படும்.

HAIL MARY BANK
BISHOP'S HOUSE,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அப்பா! நீங்கள் ஓர் ..."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரோ என்னைநன்ருய் அறிந்தவர் போல் எனது உத்தியோகபதவிக்குரிய பெயரால் என்னை அழைத்து, ஆஸ்பத்திரிக்கன்னிகாஸ்திரீமாரின் சின்னக்கோவிலிலே பூசைவைக்கச் சுவாமிஒருவர் வருவார்அல்லவா? அவர் என்னிடம் பாவசங்கீர்த்தனம் கேட்பாரா? என்று அங்கலாய்ப்புடன் வினவினர். அதற்குநான்: அவரும் போய்க்கேட்டால் வந்து கேட்பார்தான்; ஆனல், இப்போது உம்மைவந்து பார்த்துவிட்டுப்போன கன்னிகாஸ்திரீ ஆஸ்பத்திரிக் குருவானவருக்குத் தெலிபோன்பேசச் சென்றிருக்கிருரென நினைக்கிறேன்; அதனல்சுவாமியார் விரைவிலேவந்து சேருவார் என்றுசொல்லி என்னல் இயன்றமட்டிலே அவரைப் பாவசங்கீர்த்தனத்துக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கும் போது, முன்சொன்ன கன்னிகாஸ்திரீ ஓர்சிறிய அறையுண்ட திருச்சிலுவையுடனும், மெழுகுவர்த்திகளுடன்கூடிய இருகத்திரிசால்களுடனும் சில வெண்துகில்களுடனும் வந்துசேர்ந்து நோயாளியின்பக்கமாகச் சிறிய பீடமொன்றைச் சித்தஞ்செய்தார். அதற்கிடையில் ஓர்ஐரோப்பிய குருவானவரும் சைக்கிள் ஒன்றிலே ஓர் 'பாய்க்'குடன் தீவிரமாகவந்துசேர்ந்தார். சேர்ந்ததும் நோயாளியின்பக்கமாகச் சென்று அவரிடம் சிலவினவினர். பின்னர்அப்படியே அவர் சிரசை அணைத்துக்கொண்டு குனிந்து அன்பான ஓர்தந்தைக்குரிய அத்துணைபெரும் அனுதாபத்துடனும், ஆத்துமஇரட்சணிய வாஞ்சையுடனும் அவரிடம் பாவசங்கீர்த்தனம கேட்டார். அந்தியவேளைக்குரிய அருமையான சிலநன்மதிகள் பகர்ந்தார். அவஸ்தைப்பூசுதல் செய்யத்தொடங்கினர்.

அப்போது கன்னிகாஸ்திரீமாரின் சின்னக்கோவிலில் பூசைக்குநேரமாகவே நானும், என்னேடுசேர்ந்த கத்தோலிக்கர்சிலரும் கூட்டமாகக் கோவில் சென்று திவ்வியபூசைகண்டு அந்தநோயாளிக்காக மன்ருடிக்கொண்டோம். சிறிதுவேளையில் அவஸ்தைப்பூசுதல்செய்த சுவாமியாரும் அங்குசமுகமாகித் திவ்வியநன்மை எடுத்துச் சென்ருர். பின்னர் பூசைமுடிந்து நான் எனது 'வாட்'டை அடைந்ததும் நோயாளியின் அந்திமவேளை அடுத்திருப்பதை அவதானித்து அவர்பக்கமாக நிற்கும் போது, அவருடைய நாவரண்டு போனதைக்கவனித்துப் பக்கத்துக்கட்டிலில் இருந்த சைவநண்பர்ஒருவர் தனக்கென்று தயாரித்திருந்த தேநீரில்கொஞ்சம் எடுத்து அவருக்குப் பருக்கினர். பருக்கியசிறிதுவேளையால் அவர் நெஞ்சு அடைக்கத் தொடங்கிற்று. இருகரங்களையும் நெஞ்சேறக் குவித்தார். தனது பெரும் வேதனைகள் மத்தியிலும் ஐயோஎன்னது, ஆகூஎன்னது முன்போலவே அந்த இன்பமான அமிர்தமொழிகளையே முன்னிலும் உரத்தசப்தமாக உச்சரித்தார். அதாவது யேசுவே, யேசுவே, யேசுவே........... என்று உரத்துச் சொல்லிக்கொண்டிருந்தார். அதைக்கேட்டுக்கொண்டு பக்கத்தில்நின்றயானும் எனது உள்ளத்தெழுந்த மனேகர உணர்ச்சிகள்மத்தியில் இருகரங்குவித்து, பரலோகத்தை ஏறெடுத்தவண்ணம் "யேசு மரி சூசையே" என்றுஉச்சரித்து, அவருடைய ஆத்துமத்தை அவர்கள்கையில் ஒப்படைத்தேன்.

கடைசியாக அவரதுமூச்சடங்கியது. பிராணன் பிரிந்தது. என்ன பாக்கியமான ஒருமரணமென்று சிந்தித்துக்கொண்டு "இரக்கமுள்ள யேசுவே, இவருக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்........சமாதானத்தில் இளைப்பாறுவாராக" என்று சொல்லலானேன். ஆம். "அப்பா நீங்கள் ஒரு கத்தோலிக்கனு" என்று ஓர் பிறசமயியான அந்தநேர்ஸ் அந்தவேளை கேட்டதில் ஆச்சரியமொன்றும் இல்லைத்தான். ஆஸ்பத்திரியில் வந்து சேர்ந்ததுமுதல் ஆவிபிரிகிறவரையில் யேசுவே, யேசுவே, யேசுவே என்று அத்துணை பெரும் உருக்கமாக இந்தநோயாளி சொல்லிக்கொண்டிருந்ததை எண்ணுந்தோறும் எனது செவிகளில் இன்னமும் ஓர்வித இன்பத்தேன்வந்து பாய்வது போல் இருப்பதும் அதிசயமல்லத்தான்.

## துணைமேற்றிராணியாருக்குத் குதூகலமான வரவேற்பு

### அனுராசபுரம்

யாழ்ப்பாணத் துணைஆயரான மகாவந். எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவருக்குச் சென்ற 8-ந் திகதி பிற்பகல் அனுராசபுரத்துக் கன்னிகாமடப் பாடசாலையில் குதூகலமான ஓர் வரவேற்பு அருளப்படலாயிற்று. மாணவரும், பெற்ருேருமாகத் திரளானேர் சமுகமாயிருந்தனர். ஆண்டவர் அவர்கள் அலங்கரிக்கப்பெற்ற ஆசனத்திலமர்ந்ததும் அவர் துணைஆயரானதையிட்டு மகிழ்ச்சிதெரிவித்து ஒருவாழ்த்துப்பத்திரம் படித்துக்கொடுத்துத் தெட்சணையும் வழங்கப்பட்டது. ஆண்டவர்அவர்கள் எழுந்து தமக்கு அருளப்பெற்ற வரவேற்புக்காக நன்றிகூறிப் பிள்ளைகள் சனசமூகத்திற்கும், திருச்சபைக்கும் தகுதியானவர்களாய் வளர்க்கப்பட வேண்டுமெனப் புத்திபுகட்டி ஆசிஈந்தனர். பின்னர் எல்லோரும் உற்சாகமாக வழியனுப்பிவைக்க அவர் தமதுகாரில் அனுராசபுர விசாரணைப்பங்கைச்சேர்ந்த சிங்களவிசாரணைப்பங்காகிய அளகலாவைக்குப் பயணமாயினர்.

### அளகலாவை

ஓர்சிங்களக் கிராமமாகிய அளகலாவையிலே சிங்களரீதியில் அவருக்குச் சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. அனுராசபுரக் கட்டளைக்குரவர் வண. சுவாம்பிள்ளை சுவாமியவர்கள் தலைமையில் ஊரவர்கள்கூடிநின்று அவர்வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். மேற்றிராணியார் காரில்வந்திறங்கியதும் அவர்கள் மட்டட்டங்காமகிழ்ச்சியுடன் அவரைவரவேற்று மாலைசூட்டிப் பவனியாக அழைத்துச்சென்று சிங்களப்பாஷையிலே படித்துக்கொடுத்த வந்தனேபசாரப் பத்திரத்திலே, தமிழ் மேற்றிராசனத்தில் சிங்களமக்களாகிய தாம் திருப்திகரமாய் வாழ்வதாகவும், அவர் சுதேசமேற்றிராணியார் என்பதையிட்டுத் தாம் பெருமையடைவதாகவும், தெரிவித்தனர். ஆண்டவர் அவர்கள்எழுந்து சிங்களத்திலே நன்றி தெரிவித்துப் பேசுகையில், சமூக ஒற்றுமையைப்பற்றியும் கத்தோலிக்கர் பிறசமூகத்தவர்களுக்கு நன்முன்மாதிரியாய்ச் சீவிக்கவேண்டுமென்பதுபற்றியும் குறிப்பிட்டு, அன்றுதினம் அங்கு தங்கி அடுத்தநாள் திவ்வியபூசை நிறைவேற்றி அநேகருக்கு உறுதிப்பூசுதல் செய்தார். பின்னர் அங்குள்ளவர்களுடன் அன்பாக அளவளாவிப் பிரியாவிடைபெற்று வெண்ணப்புவாக்குப் பிரயாணமாயினர்.

### வெண்ணப்புவா

ஆண்டவர்அவர்கள் வெண்ணப்புவா விசாரணைப்பங்கில்தான்பிறந்தவர். அவரின் தந்தையார் அங்கு உல்லட்டியா எனும் கிராமத்தில் மிகவும் கணிக்கப்பெற்ற ஆசிரியராய்விளங்கி உல்லட்டியா உபாத்தியாயர் என அறியப்பட்டு வந்தவர். அதனல் புதியமேற்றிராணியார் பிறந்துவளர்ந்த பதியாகிய வெண்ணப்புவா விசாரணைப்பங்கிலே சென்ற 9-ம், 10-ந் திகதிகளில் அவருக்குப் பரிமளிப்பான உபசரணைகள் நடத்தப்பட்டன. 9-ந் திகதி சாயந்தரம் அப்பதி மக்கள் வெள்ளம்போற் திரண்டு தூரத்திலே வீதியில் அமைத்திருந்த வரவேற்புப் பந்தரில் கூடிநின்று ஆண்டவரின் வருகையை எதிர்பார்த்து நிற்கும் போது, ஆண்டவர்அவர்கள் தமது காரில்வந்துசேரவே, யாவரும்ஆர்ப்பரித்துப் பரிமளமலர்மாலைசூட்டி பாண்டுவாத்தியகோஷத்துடன் ஆடம்பரமாகக் கோவிலுக்கு அழைத்துச் சென்றனர். அங்கே அவர் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளினர். அன்றிரவு அவர்கள் பேரால் அவருக்கு அன்பளிப்பு விருந்து நடத்தப்பட்டது. மறுநாட்காலை அவர் திவ்வியபலிபூசை நிறைவேற்றியபின் அயற்புறங்களிலிருந்தும் அநேகர் வந்துகூடிய சமூகத்திலே சகலவரிசைகளுடன் அவரை வரவேற்பு மண்டபத்துக்கு அழைத்துச் சென்று, அவ்வூர்க்கட்டளைக்குரவர் தலைமையில் மகத்தான உபசரணை நடத்தினர். சோபனபத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. தெட்சணைகளும், பலரால் பாராட்டுரைகளும் வழங்கப்பட்டன. ஆண்டவர்அவர்கள் தமக்குச் செய்த சங்கைக்காகப் பெரிதும் நன்றித்துதி கூறித் தாம்அப்பதியில் பிறந்ததையிட்டுப் பெருமையும், அப்பதிக் கிறீஸ்தவர்கள் உத்தமகத்தோலிக்கராய், நல்ல சமூகப் பழக்கமுள்ளவர்களாய் இருப்பதையிட்டுத் தாம் சந்தோஷமும் அடைவதாகக் குறிப்பிட்டு ஆசீர்ந்தார். பின்னர் பலரோடும் அன்பாக அளவளாவிச் சேமம் விசாரித்தனர்.



## பெரியகட்டு அர்ச். அந்தோனியார் — திருநாள் —

### 7-8-49

பெரியகட்டில் கோயில்கொண்டு அருள் புரியும் கோடிஅற்புதவரத்தராகிய அர்ச். அந்தோனியாரின் திருநாள் ஆவணி மாதம் 4-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அம்மாதம் 7-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை சுற்றுப்பிரகாரத்துடன் முடிவுபெறும்.

யாத்திரிகளுடைய வசதிக்காக இராறெயின்களைத் தவிர மற்றெல்லாப் பகல் றெயின்களும் ஆவணி மாதம் 5-ந் திகதி தொடக்கம் 8-ந் திகதி வரையும் பெரியகட்டில் நிற்பாட்டப்படும்.

கவனிப்பு:
1. கடைகட்ட விரும்புகிறவர்கள் கட்டளைச் சுவாமியாரிடம் உத்தரவு கேட்கவேண்டும்.
2. மெழுகுதிரிகளும் மற்றும் பத்திக்குரிய சாமான்களும் கட்டளைச் சுவாமியாரால் விற்கப்படும்.
3. 7-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு நாடகம் ஒன்று நடிக்கப்படும்.

கட்டளைக்குரு.

## மரணசங்கதி.

பாண்டியன்தாழ்வுவாசரும், கடந்த 31 வருடகாலமாக நமது அச்சியந்திரசாலையில் கடமையாற்றிவந்தவருமான திரு. யேம்ஸ் சிங்கராயர் (தம்பிஐயா) என்பவர் சிலமாதகாலம் நோய்வாய்ப்பட்டிருந்து தமது 51-மவயதில்சென்ற 8-ந்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் காலஞ்சென்ற துயரசங்கதியறிந்து மனவருத்தமுற்ருேம். இவர் அமைதி, பொறுமை ஆதியாம் சீரிய குணங்கள் வாய்ந்தவர். நம்மச்சியந்திரசாலையில் நெடுங்காலம் கடமைபார்த்து இளைப்பாறியிருந்த திரு. இளையதம்பி (யேம்ஸ்) என்பவரின் புதல்வர். இவருக்கு ஒரு புத்திரனும் ஒரு புத்திரியுமுள்ளனர். அடுத்தநாள் சனிக்கிழமை சாயந்தரம் 5 மணியளவில் நமது அச்சியந்திரசாலை அதிபர் வண. ஏ. சியேப்கா சுவாமியார் வீட்டிலும் கோவிலிலும் திருச்சடங்கு நிறைவேற்றித் துக்கசங்கீதம் பாடிநிற்க, இனசனர் சிநேகிதர் உடன்பணியாளர் ஆதியோர் புடைசூழ்ந்துநிற்க, இவர்பிரேதம் சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படலாயிற்று. இவரையிழந்து துன்புறும் மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், மருமகன் மற்றும் இனசனரோடு நாமும் அனுதாபப்படுகின்ருேம்.

R. I. P.

## பெரியவிளான்

ஆண்டவர் அவர்களது அருமைத் தாயாரின் பிறப்பிடமாகிய பெரியவிளானிலே, சென்ற சனிக்கிழமை பிற்பகல் அவருக்கு மனேகரமான வரவேற்பளிக்கப்பட்டது. அப்பதிவாசிகள் ஒன்றுகூடிப் பத்திமாபதிவரைசென்று அவரைவரவேற்று அழைத்துவந்தனர். பட்டுக்குடைகள் நிழல்செய்ய, குருமார்பலர் புடைசூழ, நாதசுரவாத்தியமிசைக்க அட்டோலிக்கமாக அழைத்துச் சென்றனர். வழிநீளம் சிறுமியர் மலர்தூவிச்சென்றனர். ஆண்டவர்அவர்கள் கோவில்முகப்பை யடைந்ததும் அவ்வூர் விதானையாரால் மாலையிடப் பெற்றதும் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டது. கோவிலின்பக்கமாக அமைக்கப்பட்டிருந்த அழகியபந்தலில் பொதுவரவேற்பு நடத்தப்பட்டது. ஆண்டவர்அவர்கள் மேடையில் நடுவாசனத் தமர்ந்ததும் பலரும் மாலைகள் சூட்டினர். சிறுமிகள்பின்னரும் வாசமலர்தூவினர். ஒலிபெருக்கி ஒழுங்கு

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரைப்பற்றிய
# ஒரு புதிய ஆராய்ச்சி முடிபு

நல்லூர், சுவாமி. ஞானப்பிரகாசர்

( முன்தொடர்ச்சி )

எறுேடோத்துஸ் கண்ட இடங்களில் திரெமிலே (அல்லது திரமேலிர்) எனப்பட்ட தமிழர் பாதகண்டத்திலேயும் முற்காலத்தில் திரமிளர்என அழைக்கப்பட்டமையை இனிநோக்குவோம். தமிழ் நூலாசிரியர்களுள் முதன்முதல் இதற்குச்சாட்சியானவர் இற்றைக்கு மூந்நூறு வருஷங்களின் முன் "பிரயோகவிவேகம்" எனும் நூலைஇயற்றிய சுப்பிரமணிய தீக்ஷிகர் ஆவர். இவர் "தமிள" எனும் வடமொழிப்பெயர்தான், "தமிழ்" எனச் சிதைந்துவந்ததுஎனச் செப்பினர். இப்பெயர் வடமொழிநூல்களுள் திரவிடம், திராவிடம்எனச் சிறிதுதிரித்து வழங்கப்பட்டதை மனுஸ்மிருதியிலும், பிற்பட்ட வடமொழிப்புராணங்களிலும் காண்கின்றேம். சில இடங்களில் தென்னுட்டார்அனைவரையும் பொதுவாய்க்குறித்தஇப்பெயரீடுதமிழருக்கே சிறப்பாய்ப்பொருந்துவது என்றதைக் கி. பி. 7 அல்லது 8-ம் நூற்றுண்டைச் சேர்ந்த குமாரிலபட்டர் "ஆந்தர த்ராவிடபாஷா" என்று வகுத்துக்கூறியதனுல் விளங்கவைத்தார். ஆந்திரம் என்றது தெலுங்கு. கன்னடத்தை இவர் தெலுங்கோடு சேர்த்தனர் போலும். அக்காலம் மலையாளம் தமிழிலிருந்து முற்றுகப் பிரிபடாது நின்றமையால் அது தமிழுள் அடங்கும். உள்ளபடி தமிழர், கன்னடர், தெலுங்கர், மலையாளர் எல்லாம் ஆதித்திரமிளருள் அடங்கியவர்களே. பிற்காலம்மட்டும் தமிழர்எனச் சிறப்பித்துக் கூறப்பட்ட தென்னுட்டாருக்குத் "திரமிளர்" எனும்பெயர் வேறு கூறப்பட்டது. இவர்களுடைய மொழிதான் 'திரமிளம்'எனச்சிறப்புப்பெயர்அடைந்தது. தமிழ்வடநாட்டாரால் திராவிடம்என வழங்கப்பட்டதற்குக் குமாரிலபட்டர் கூற்று ஒரு நற்சான்று.

திரெமிலே (திரமேலிர்) எனும் பெயர் தென்னுட்டில் தமிழர் என மருவிவழங்க, வடமொழி நாடகங்களிலும் சமணர் நூல்களிலும் அது தவிட, தபிளஎன மாறுவதாயிற்று. ஆயினும் கி. பி. ஆறும் நூற்றுண்டிலேதான் வராகமிகிரரின் நூலின்பழங்கையெழுத்துப்பிரதிகளில் 'த்ரமிட' எனும் உருவம் காணப்பட்டது. அந்நூற்றுண்டிலேயே மங்கலேசஅரசன் சாசனங்களில் 'திரமில' எனவருகின்றது. தென்னிந்தியத் தமிழரை அறிந்த கிரேக்கஆசிரியர்கள் தங்கள் நூல்களில் தமிழர் என்ற பிற்கால உருவத்தைத்தான் தமோராய் ஆதிய வெவ்வேறு வகையாய்த்திரித்து எழுதினர்.

இவ்வாறுயின் தெர்மிலே அல்லது திரெமிலே என்னும் சொல்லின் பொருள்யாது? பழஞ்சொல் ஆராய்ச்சி முடிபுகளின்படி தெர்மிலேஎன்பது திரெமிலே எனும் உருவத்தின் ஒலி மாற்றுவடிவம். திரெமிலே என்பது திரமேலிர்எனும் பழந்தமிழின் கிரேக்க வடிவம். திரஎன்பது திரை எனுஞ் சொல்லின் பழையவடிவம். கடல் என்பது அதன்பொருள். திரைமேலிர் என்பதில்-இர்என்பது வேளிர் மகளிர் என்றவற்றின்போல உயர்திணைப்பன்மையை உணர்த்தும் பழையகடைநிலை.—இர் இன்றைக்குப்பெரும்பாலும்-அர்எனநிற்கின்றது. ஆகவேதிரமேலிரை இன்றையவழக்கின்படி திரைமேலர்எனவேண்டும்.திரைமேலரையே கிரேக்கர் திரெமிலேஎன்றும் தெர்மிலேஎன்றும் திரித்துச்சொல்வோராயினர் என்க. கடல்மேல்செல்வோர் கடலோடு சம்பந்தம்பூண்டோர் என்பதுதான் திரைமேலர்என்பதன் கருத்து. பிரயாணம் பயணம்என வந்ததுபோல, திரமேலர், தமிலர், தமிழர் என வந்தது. தமிழர்பேசியமொழி தமிழ்என்றுயிற்று.

தமிழர்ஆதியிலே கடல்மேல் வலிபடைத்தோராய் இருந்தனர்என்றமை பலஏதுக்களாலும் பெறப்படும். இதனுலேதான்போலும் அவர்களுள் பிற்காலத்திலும் பாவர், திரையர், திமிலர், மீனர்எனும் முக்கியபிரிவார் இருக்கக்காண்கின்றேம். பாவர் பாவையின் மீதுசெல்லுவோர். இவர்கள் சிந்துவெளியில் மிக்கிருந்ததை அவ்விடத்துக்கண்டெடுத்த சித்திரலிபிச்சாசனங்கள் காட்டும்என்ப. திரையர்எனுஞ்சொல் திரமிலர் என்பதைப்போலத் திர எனும் அடியாய்ப் பிறந்து, நெய்தல்நிலத் தலைவரைக் குறிப்பது. திமிலரும் நெய்தல்நிலமக்களே. திமில் என்பது திரைமேற்செல்வது: கட்டுமரம், மீன்படகு. இது கடற்றெழிலாளரையே குறிக்கும். திமில்என்ற சொல்லிற்கு "திரைமேல்" என்பதே சப்தஉற்பத்திஆயின், தமிழரும் திமிலரும்எனும் இருசொல்லும் ஒரே அடியாற் பிறந்துள்ளமைநோக்கி மகிழத்தக்கது. பாண்டியன் மீன்கொடி உயர்த்தியதும், அவன் மீனவர் தலைவன் என்றமையினுற்போலும். கிறேத்தா தீவின் மீனெஸ் எனுந் தலைவனையும் இங்கு நினைக்கத்தகும். அவன்பெயர் மீனன்போலும். அத்தீவில் கடலோடு சம்பந்தம் பூண்டிருந்த சாதியார் திரமிலர் என்று வழங்கப்பட்டமை மிகப் பொருத்தமுள்ளதே ஆகின்றது. தமிழர் பண்டுதொட்டுக் கடற்செலவில் சிறந்தவர்கள் என்பதற்கு அன்னுருடையமொழியில் கடல், பரவை, புணரி, ஆர்கலி, முந்நீர்எனச் சமுத்திரத்தையும், கலம், தோணி, மிதவை என மரக்கலத்தையும் குறிக்கும் பழந்தமிழ்ச்சொற்கள் பல இருத்தலும் சான்று.

திரமிலர்எனும் சொல்லுற்பத்தி இவ்வாறுயிருக்க வடமொழியில் அதற்கு வேறெரு பொருள் கொள்ளலானது எப்படி? பின்னுளில் வடஇந்தியாவில் வந்திறங்கிய ஆரியர் தம்மோடு போர்முனைந்து முதுகுகொடுத்துத் தென்னுட்டை அடைந்திருந்தோரின் பழைய பெயரையே திரமிளர்என்றும் அப்பாற் திரவிடர் திராவிடர்என்றும், படிப்படியாய் மாற்றிவைத்துக்கொண்டு அன்னேர் தோற்று ஓடியதை அவர்களதுபெயரோடு பொருத்தி "தறு" (தாத்து) எனும் அடியாய்ப் பிறந்ததே "திராவிடம்" எனும்சொல் என்றனர் போலும். இது பின்னெண்ணத்தால் எழுந்த சொற்பிறப்பேஎன்பது வெளிப்படை. ஸமஸ்கிருதத்திலே தமிழினின்றும் சென்றடைந்த வேறுபல சொற்களுக்கும் இவ்வாறே அம்மொழியாளர் பொருந்தாத சப்தோற்பத்தி செய்திருத்தல் பிரசித்தம் என்பதை எமது சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியில் ஆங்காங்கு கண்டுகொள்க.

திரமிளம்எனும்உருவம் தமிழ்என்பதற்கு முந்தியது எனக் காட்டும் சான்றுகள் பல உள. தமிழ்நூல்கட்கு முற்பட்ட சமஸ்கிருதநூல்களில் திரமிளம் திராவிடம் எனும்உருவமே வழங்குகின்றது. பஞ்சதிராவிடம்எனும் பூர்வதேசப்பெயரையும் நோக்குக. தமிழ்ப்பாகதங்களுள் ஒன்றுகிய மலையாளத்திலுள்ள பழையநூல்களிலும் திரமிளர் (Diramila) எனும் பெயரன்றி தமிழர்எனவருவதில்லை. ஆதிகாலந்தொட்டுத் தமிழரோடுஅடுத்து வசித்திருக்கின்ற சிங்களரும் அன்னேரை ந்தமிழ என அழைத்துவருகின்றமையும் ஒன்று. இன்னனபல ஏதுக்களைக் கொண்டுபோலும் ஈசானதேசிகர் வதியோர் தமிழ்ச்சொல்லுக்குத் திரமிளச சொல்லுற்பத்தியைக் கூறிப்போந்தனர். அவ்வுற்பத்தியே சாத்திர ஆராய்ச்சியால் வலியுறுகின்றமை இதுகாறும் சொல்லியவற்றால் விளங்கும்.

---

## மாதோட்டத்தபால்

[ நாட்டுத்தூதன் ]

ஐயா காவலன் ஆசிரிய! இப்பகுதி மக்கள் வருடந்தோறும் தை, மாசி எனும் மாசங்களில்தான் அதிகமான நோய்களால் பீடிக்கப்பட்டுவந்தனர். ஆனல் இப்பொழுதோ ஆனி, ஆடி மாசங்களில்தான் அதிகமான நோய்களால்மும்முரமாகத்தாக்கப்பட்டுவருந்துகின்றனர். இதுவும் ஓர்நவீனசூட்சியென்றே சாற்றவேண்டியிருக்கிறது. நமது ஸ்ரீலங்கா சுதந்திரம்அடைந்து ஒன்றரைவருடங்கள் பூர்த்தியாகியும் இங்கு சுதந்திரஆட்சி சொலிப்பதாகக் காணப்படவில்லை. அதற்குப்பதில் சர்வாதிகாரமுறையே தாண்டவமாடி வருகிறதெனலாம்.

மாந்தை லூர்துகெபி:— மடுமாதாவின் பழையதலமென மாண்புற்றிலங்கும் மாந்தையம்பதியிலே அடம்பன் கட்டளைக்குரவரின் அயராத முயற்சியால் அமைக்கப்பட்டுவரும் லூர்துகெபிவேலையாழ்ப்பாணத்திலுள்ள கைதேர்ந்த சிற்பிஒருவரின் முகாமையில் துரிதமாக நடைபெற்றுவருகிறது. இம்மாசமுடிவுக்குள் இதுபூர்த்தியடையுமென நம்பப்படுகின்றது. மாந்தை மாதா மகிமைபெறுவாராக.

கர்த்தர் கோவில்:— அடம்பன் விசாரணைப்பங்கைச்சேர்ந்த பரப்புக்கடந்தான் கிராமத்திலுள்ள திவ்விய கர்த்தரின்கோவிலை விசாலமானதொன்றுய்த் திருத்திஅமைப்பதற்கான முயற்சி ஆரம்பமாகியிருக்கிறது. மருதமடுத்திருப்பதி மகோற்சவ காலங்களிலும், தபசுகாலத்தின் ஆறும் வெள்ளியிலும் இஃது ஒருசிறு யாத்திரைத் தலம்போல் காட்சியளித்து வருவதால் இதில் ஓர்சிறந்த கோவில் அமைப்பது அவசியமாகும். இத்திருப்பணியும் அடம்பன் கட்டளைக்குரவரின் முயற்சியாலேயே தொடக்கப்படவிருக்கிறது.

மீன் புகைவண்டி :—சென்றயுத்தகாலத்திலே இங்கிருந்து யாழ்ப்பாணம் போகும் பிரயாணிகள் இரவில் அனுபவித்த சொல்லொணுக் கஷ்டங்களைக் குறைப்பதற்கும், மன்னுர்ப்பகுதி மீன் ஏற்றுமதி வசதியை முன்னிட்டும் தலைமன்னுரிலிருந்து அனுராசபுரம்வரையும் ஓடிவந்த மீன்புகைவண்டிச் சேவையானது அவசியமற்றதெனக்கருதி முற்றுக நிற்பாட்டப்பட்டிருக்கிறது. அதனுல் மீன்ஏற்றுமதி வசதியீனமாகவே இருக்கும்போலும். இப்புகைவண்டிச் சேவையும், "மல்வத்தைஓயா" திட்டமும் முன்னிருந்த பிரதிநிதி திரு. தியாகராஜா அவர்களை ஞாபகப்படுத்துவனவாகும்.

மதுவிலக்கு:— இப்பகுதியிலே மக்கள் பொதுவாக மதுவகைகளையும், அதிகமாகக்கள் அருந்துவதையும்விலக்கிவிடப் பலரும்கங்கணங்கட்டி நிற்கின்றனர். அதனுல் கள்ளுச்சேர்க்கத் தென்னை, பனை மரங்கள் கொடுக்கப்படாதெனச்சிலகிராமவாசிகள் கிளர்ச்சி செய்து வருகின்றனர். ஒற்றுமையின்மை இன்னுங்காணப்படுவதாலே இம்முயற்சி நற்பலன் தருமோவென்பது சந்தேகத்திற்குரியதே. உண்மையாகவே சகலரும் ஒற்றுமைபூண்டு இதனை அனுகூலம் பெறச்செய்யின் மன்னுர்-மாதோட்டம் மாண்புற்றிலங்கும்என்க.

கல்வித்தினவிழா:—பாப்பாமோட்டைக் கத்தோலிக்க பாடசாலையிலே, நாவற்குளக் கத்தோலிக்க பாடசாலை மாணவர்களும்சேர்ந்து இவ்விழாவைச் சென்ற 15-ந்திகதி பரிமளிப்பாகக் கொண்டாடினர். நாவற்குளப் பாடசாலைத் தலைமைஆசிரியர் தலைமைதாங்கினர். ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை கல்வித்தினத்தையிட்டுப் பேசினர். இதில் கிராமவாசிகளும் கலந்துகொண்டமை குறிப்பிடற்பாலது. மத்தியானம் நடைபெற்ற பெருவிருந்துடன் விழா முடிவெய்தியது.

---

## நற்கருணைத் திருநாள்

வங்காலை

வங்காலையிலே திவ்விய நற்கருணைத் திருநாள் சென்ற 10-7-49 ஞாயிற்றுக் கிழமை பத்தியருட்சிக்குரிய விதமாக நடந்தேறியது. இதற்கு ஆயத்தமாகக் கோவிலும், பலிபீடமும் என்றுமில்லாதவிதமாக அலங்கரிக்கப்பெற்றுக் கண்டோர் அனைவரும் பரவசம் அடையும்படியான காட்சிஅளித்துநின்றன. திருநாளன்று காலை 7 மணிக்கு வங்காலைக் கட்டளைக்குரவர் வண. கொன்சாலுஸ்சுவாமி அவர்களால் பாடற்பூசை நிறைவேறியது. பின்னர் திவ்வியநற்கருணை பகல்முழுதும் எழுந்தேற்றம்பண்ணி வைக்கப்பட்டது. சாயந்தரம் 4 மணிக்கு வண. டேவிற்மோண் சுவாமியாரும், வண. ஈ. பம்பதிச்சுவாமியாரும் துணைபுரிய, வண. பொமிக்கோ சுவாமியார் வேஸ்பர்பாடி, பாடசாலைச் சிறுவர் சிறுமியர் முன்செல்ல, பாடகர்குழாம் கீதம் பாட, ஆறிரு சிறுமிகள் மலர்தூவ, பூசைப்பரிசாரகர் நால்வர் மேலாப்புப் பிடிக்க நற்கருணைப்பாத்திரத்தைக் காத்தேந்திநிற்க, நற்கருணைநாதர் வீதியெழுந்தார். சுற்றுப்பிரகாரம் கோவிலுக்கு முற்பக்கமாயுள்ள வீதிவழியே சென்று அழகுற்றுவிளங்கிய பந்தரை அடைந்ததும் திவ்வியநாதரை அங்கு வீற்றிருக்கச்செய்து, செபம்வாசித்து, முதல் ஆசீர்வாதம் அருளப்பட்டது. அதைத்தொடர்ந்து, சுற்றுப்பிரகாரம் நடைபெற்று முச்சந்தியில் கண்டோர் மனதைக் கவரும்படியாக அமைக்கப்பட்டிருந்த பந்தரில் சற்பிரசாதநாதர் திரும்பவும் அமர்ந்தபின் இரண்டாம் ஆசீர்வாதம் அருளப்பட்டது. அதைத் தொடர்ந்து, கோவிலின் முன்னிருந்த மூன்றும் பந்தரில், வந்தமர்ந்தார் நமது திவ்வியகர்த்தர். அங்கு மூன்றும் ஆசீர்வாதம் அருளப்பட்டபின் சுற்றுப்பிரகாரம் கோவிலை அடையவே அங்கு "தெதேயும்" என்ற தோத்திரகீதம் பாடப்பட்டதும் கடைசிஆசீர்வாதத்தைப் பெற்று, எல்லோரும் நற்கருணைநாதருக்குத் தோத்திரம்சொல்லித் தத்தம் இல்லம் எய்தினர்.

நற்கருணை வீரன்

---

## நேர்த்தியின் பூர்த்தி

அர்ச். லூர்துமாதாவினதும், அர்ச். ஆரோக்கியநாதரதும், அர்ச். அந்தோனியாரதும் மன்ருட்டால் எனது குழந்தையின் தீராதநோய் குணமடைந்து நான் கேட்டகாரியங்கள் அனுகூலமடைந்தன. ஆனதால் இதை நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். அவர்களின் நாமங்கள் என்றும் புகழப்படுவதாக.

**B. S. Wilfred**
**Etalai**

---

—பத்திமாபதியிலிருந்து அனுப்பப்பட்டுவரும் தேவதாயாரின் சுரூபம் ஒன்று வருகிற கார்த்திகையிலே இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மா எனும் நாடுகளில் ஓர்சுற்றுப்பிரயாணம் நடத்தவிருக்கிறது. 45 இந்தியமேற்றிராசனங்கள் இந்தச்சுரூபத்தை வரவேற்பதற்கான ஒழுங்குகளை ஏலவே செய்திருக்கின்றன.

—பம்பாய்நகர் அர்ச். சவேரியார் கல்லூரியைச்சேர்ந்த யேசுசபைக் குரவரும், பிரபல புதைபொருளாராய்ச்சி வல்லுநருமான வண. எச். ஹீறுஸ் சுவாமி அவர்கள் பரிசுத்தவருடத்திலே இந்திய பொருட்காட்சி ஒன்றைநடத்துவதற்குத்திட்டஞ்செய்துவருகின்றூர். அது பற்றியவிபரங்களைச் சமீபத்தில் அவர் வெளியிடவிருக்கின்றூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதைப்பகுதி

## இல்லறமா? துறவறமா?

(M. C. F. நாரந்தனை)

*இச்சிறுகதை எனதுநண்பர் ஒருவர் சொல்லிய சிலகுறிப்புரைகளை ஆதாரமாகக்கொண்டு கற்பனுருபமாக எழுதப்பட்டது.'*

கதாநாயகிசுசிலா சொல்லுகிறுள்:—அன்று நானும், எனது நாயகரும் கோவிலிலிருந்து வீடுவந்துசேர்ந்ததும் வரவேற்புச்சாலையில் போடப்பட்டிருந்த சாய்மானக்கதிரையில் படுத்துக்கொண்டேன். அப்பொழுது என் மனம் எள்ளத்தனையும் நிம்மதியடையவில்லை. கோவிலிலிருந்து வெளிகிளம்பும்போது சிஸ்றர்மேரிஆனைக் கண்டது முதல் எனதுமனம் அமைதியற்றுப் போக, பழையஞாபகங்கள்பல என் சிந்தனைக்கடலில் அலைபோலக் கொந்தளித்துக்கொண்டிருந்தன.

பாடசாலையில் படித்த நாட்களில் நானும் மேரிஆனும ஒன்றுக ஒரே வகுப்பில் படித்தோம். நாங்கள் இருவரும் படிப்புமுடிந்ததும் துறவறத்தை மேற்கொண்டு கன்னிகாமடத்திற் சேர்ந்துகொள்வதென்று நிச்சயித்துக் கொண்டோம். மேரிஆனின் பெற்றேருக்கு அவளைவிட வேறேபிள்ளைகளும் இருந்தார்கள். நானே எனதுபெற்றேருக்கு ஏகபிள்ளையாய் இருந்தமையால் எனதுகருத்துக்குப் பலமான எதிர்ப்பு இருக்கத்தான் செய்தது. இது எனதுபெற்றேரால்அன்று, இனசனர் சிலராலேயே. என்பெற்றுரோ நல்லதேவபக்தியுள்ளவர்கள். ஆனால்அவர்கள் என்கருத்துக்குமாறுய் எதிர்த்து நிற்கவில்லை. "உனக்குச் சகல சுதந்தரமும் உண்டுஅல்லவா? உன்விருப்பம் போல் நடந்துகொள்ளலாம். எங்களைப்பற்றி நீ சிந்திக்கவேண்டியதில்லை. நாங்கள் தனிமையானசீவியம் நடத்த வேண்டுமென்பது கடவுள்சித்தமாயும் இருக்கலாம்" என்று என் தந்தையார், எனதுஉள்ளக்கருத்தைத் தெரிவித்ததும் சந்தோஷமாகச் சொல்லிவிட்டார். ஆனால், எங்கள்வீட்டுக்குவரும் இனசனர்எல்லாம் எனதுகருத்துக்கு மாறுய்: "தங்கைச்சி! என்ன இருந்தாலும் நீ உன்பெற்றேருக்கு ஒரேயொருபிள்ளை. அதனால் அவர்களின் பிற்காலத்தில் நீயேஅவர்களுக்கு உதவி செய்யவேண்டியவள். வயதுசென்ற காலத்திலே ஒரு பெற்றபிள்ளை அருகிலிருந்தால் அவர்களுக்கு எவ்வளவு ஆறுதலாயிருக்கும்? அதனால் உன் எண்ணத்தை அடியோடு விட்டுவிடு" என்று புத்திசொல்வார்கள். இதைக் கேட்டதும்: "எனதுபெற்றேர் பிள்ளையே இல்லாமல்இருந்தால் எப்படி இருப்பார்களோ அப்படியே இருக்கலாமே; உலகில் தம்பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றேர் எத்தனையோபேர் இருக்கிறார்களே" என்று நியாயங்கூறிவிடுவேன். ஆனால் சில காலம்சென்றதும் எனதுஅயல்வீட்டிலிருந்த கிழவனுர்ஒருவர் தனதுபிள்ளைகளால் கைவிடப்பட்டு அடைந்தகஷ்டங்களைக் கவனித்தபின் ஒருகாலம் அதேகஷ்டங்கள் கவலைகளைத்தானே என்பெற்றேரும் அநுபவிக்கக்கூடுமே என்றஎண்ணம் என்மனத்திலே ஒரு பெரியபாரத்தைச் சுமத்திவிட்டது. அதனால் சிலகாலத்துள் என் துறவற எண்ணத்துக்கு ஒருமுற்றுப்புள்ளி போட்டுவிட்டேன். எனதுபடிப்பு முடிந்து சிலவருஷங்களின்பின் எனது பெற்றேரின் விருப்பப்படியே படித்தவரும், நற்குணமுள்ளவருமான வாலிபர்ஒருவரை மணந்துகொண்டேன்.

ஐந்து ஆறுவருடங்கள் சென்றன. நானும் இரண்டுகுழந்தைகளுக்குத் தாயாகிவிட்டேன். அதற்கிடையில் எனதுபெற்றேரும் காலகதி அடைந்துவிட்டார்கள். எனதுவாழ்க்கைப்படகும் யாதாமோர் அபாயமுமில்லாது ஆனந்தக்கடலில் அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. நானும், எனதுஇல்லறவாழ்க்கையும் இப்படியே என்றைக்கும் இருக்கவேண்டுமென ஆசித்துக்கொண்டிருந்தேன். அதற்காகப்பரிசுத்த தேவதாயாரை அல்லும்பகலும் கையெடுத்து ஆவலுடன் பிரார்த்தித்துவந்தேன்.

சுகதுக்கம் வாழ்க்கைச் சுழல்சக்கரம். இன்பமும் துன்பமும் வாழ்க்கைக்கு இன்றியமையாதன.—சிநேகிதர்கள் ஒருவனுக்கு இன்றியமையாதவர்களே. ஆனால் அவர்கள் கெட்டவர்களாய்இருந்தால் நல்லவன்ஒருவனின் நீண்டகால நல்லபழக்கவழக்கங்கள்தானும் மறைந்து கெட்டவைகள் தலையெடுப்பது வாழ்க்கைஅநுபவம்.—எனதுகணவர் ஆனந்தத்தின் சிநேகிதர்குழாமிலும் கெட்டவர்கள்சிலர்வந்து புகுந்துகொண்டனர். நல்லசிநேகிதர்களைநாமாக அடைகிறேம். ஆனால் கெட்டவர்கள் தாங்களாகவந்து ஒட்டிக்கொள்ளுகிறுர்கள் என்பதை அவர் நினைக்கவில்லை. குடும்பத்தைச்சிதைத்துக் குட்டிச்சுவராக்கும் மதுபானத்தைக்கனவிலுமே அறியவாதஆனந்தர் குடிகாரன்என்ற பட்டத்தை வலியத் தேடிக்கொண்டார். மதுஅரக்கன் அவரோடுமாத்திரம் நின்றுவிடவில்லை. எனதுவாழ்க்கையிலும் ஒருகொந்தளிப்பை உண்டுபண்ணினுன். இத்தனை வருடகாலமும் மிகஅமைதியாக ஓடிக்கொண்டிருந்த எனதுவாழ்க்கைப் படகு மேலேசெல்ல வழிகாணுது தத்தளித்தது. நாள்செல்லச்செல்ல ஆனந்தரின் நற்பழக்கவழக்கமெல்லாம் அறவே மறைந்தன. நான் சமைத்துப் போடும் உணவில் ஒருநாளுமே ருசிக்குறைகாணுதவர் இப்போதோ அது ருசியாயில்லையென்று குறைகாணவுந் தொடங்கிவிட்டார். வீட்டிலும் நாளாந்த சச்சரவாய்இருந்தது. தேவபக்திநிறைந்த ஆனந்தர் கோவிலுக்குப் போவதே அபூர்வமாயிற்று. குருமாரையும், அவர்களைச்சேர்ந்தோரையும் அவர் இகழ்ந்துபேசுவது சகசமாகிவிட்டது. இவையெல்லாம் எனக்குத் தாங்கமுடியாத மனேசஞ்சலத்தை உண்டுபண்ணிற்று. எனது துறவற எண்ணத்தை மாற்றியதையிட்டுச் சில சந்தர்ப்பங்களில் நான் மனம்நொந்ததுண்டு. ஆனால் சகலமும் தேவசித்தம்என்றெண்ணி எல்லாவற்றையும் அவர்சித்தத்துக்குப் பணிந்தமனதுடன் சகித்துவந்தேன். தேவதாயாரிலே எனது நம்பிக்கைமுழுவதும்வைத்து அழுகையோடும், கண்ணீரோடும் அவரையே இடையருது மன்ருடிவந்தேன். ஏனெனில் தமதுபிள்ளைகளை மாதா கைவிடமாட்டார்என்பது நன்ருகஎனக்குத்தெரியும். இப்படியே ஒரு வருஷம் கழிந்தது. ஆனால் எனது வாழ்க்கையில் யாதுமாற்றமும் ஏற்படவில்லை.

(தொடரும்)

### நாஞசங்கதிகள்

—தற்போது உலகமுழுவதிலும் திருத்தொண்டாற்றி வருகின்ற கத்தோலிக்க குருமார் தொகை எல்லாமாக 9,47,000 பேரென்று ரோமாபுரியிலே பாப்பரசரின் விசுவாசப்பரப்புதல் ஸ்தாபனம் வெளியிட்டுள்ள புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. இவர்களில் சுமார் 2,50,000 பேர் பற்பல சந்நியாச கூட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

* * *

—அர்ச். சவேரியார் யப்பானுக்குச் சென்ற நான்காம் நூற்றுண்டுவிழாவின் ஞாபகமாக அங்குசமீபத்தில் நடைபெற்ற மகாயாத்திரையில் கலந்துகொண்ட ஸ்பானியர்கள் அவ் அர்ச்சியசிஷ்டவரின் அறையுண்ட திருச்சிலுவையையும் தம்முடன் எடுத்துச் சென்ருர்கள்.

* * *

—ஆஸ்திரேலியாவிலே, மான்லி நகரிலுள்ள அர்ச். பத்திரிசியார்கல்லூரியின் அறுபதாம்வருட வைரயூபிலி சமீபத்தில் கொண்டாடப்படலாயிற்று. இதன் பழையமாணவர்களில் சிட்னி நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஜில்ரோய் ஆண்டவரும், மற்றும் மூன்று அதிமேற்றிராணிமாரும், 15 மேற்றிராணிமாரும் அடங்குவார்கள்.

* * *

—பரீஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் சூகார் ஆண்டவரின் மரணத்தாலே கருதினல்மார் திருச்சங்கத்தில் தற்போது 15 ஸ்தானங்கள் காலியாயிருக்கின்றன. 1946-ம் ஆண்டு மாசிமாதம் 32 அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரைப் பரிசுத்தபாப்பரசர் கருதினல்மார் ஆக்கியது முதல் இதுவரை 14 கருதினல்மார் காலஞ்சென்றிருக்கிறார்கள்.

* * *

—பரிசுத்த ஸ்தானத்தினிடமாக அமெரிக்க ஐக்கியதேச ட்றூமன்பிரசாதிபதியின் சொந்தப் பிரதிநிதியான திரு. மீறன் ரெய்லர் அவர்கள் ஒரு வருடகாலம் அமெரிக்காவில் தங்கியிருந்தபின்னர் சமீபத்திலே வத்திக்கான் இராச்சியத்துக்குத் திரும்பிச் சென்று ஏலவே பாப்பரசரால் இருமுறை பேட்டியருளப் பெற்றிருக்கிறுர்.

* * *

—1950-ம் ஆண்டின் பரிசுத்தவருடத்திலே ஆஸ்திரேலியர்களும், நியூசிலாந்தர்களுமாகச் சேர்ந்து ரோமாபுரிக்கு உத்தியோகமுறையான ஓர் யாத்திரைநடத்த ஆயத்தப்படுகின்றுர்கள். அடுத்தவைகாசியிலே இவர்களில் 700 யாத்திரிகரை ஏற்றிப்போகக் கப்பல் ஒன்று வாடகைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறது.

**அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்**

சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



**நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்ருட்டங்களும்**

யாழ்ப்பாணம்—யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தாலும் பரிசுத்த பத்திமா-மடுமாதாவின் மன்ருட்டாலும் அர்ச். அந்தோனியர், அர்ச். ஆரோக்கியநாதர் முதலாம் அர்ச்சியசிஷ்டர்களின் வேண்டுதலினலும் எனதுதகப்பனுருக்கு உண்டான வருத்தம் பூரணசுகம்பெற்றது. நேர்த்தியின்படி ஏழைகளின் தரும அப்பத்துக்கு ரூபா 5 அனுப்புகிறேன். J. P.

**கேட்டநன்மைகள் அனுகூலமானதினுல் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்**

பண்டாரவளை: எம். எஸ். பேர்ணுட் பீற்றர் 1-00—இளவாலை: எஸ். ஏ. எலிசபேத் 3-00—உறக்கபொல்ல: விக்றர் ஜே. சகாயம் 2-00—மஸ்கேலியா: ம. வஸ்தியாம்பிள்ளை 2-00, எம். நீக்கிலாப்பிள்ளை, 4-00—பொகவன்றலாவ: எவ். எஸ். பிள்ளை 2-00—தியத்தலாவை: ஏ. எம். பீற்றர் 1-00—கல்முனை: ரி. சவிரிமுத்து 10-00—கல்கமுவா: மா. ச. அந்தோனிப்பிள்ளை 2-50—அறநாயக்கா: எல். ஏ. எஸ். தோமாஸ் 1-00—கொற்றுவல: எவ். பி. சாமுவேல் 2-00—பொகவன்றலாவ: பி. ஆர். மாட்டீன் 2-00—கல்கமுவா: அ. மரியாளுள் 1-00—நமுனகல: எஸ். வி. பீற்றர் 3-00—கரவெட்டி: பி. கபிரிகேற்பிள்ளை 1-00—நாவலப்பிட்டி: எக்ஸ். ஆர். சில்வானனே 1-00—திரிகோணமலை: எஸ். பி. யோண் 5-00—கொச்சிக்கடை: பி. என். பாலையா 10-00—காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசிஐயா 10-00—நனுஓயா: எவ். எம். பர்ணபாஸ் 2-00—டெகிவத்தை: மிசெஸ். ஏ. வி. பிரான்சீஸ் 3-00—நனுஓயா: ஓர்உபகாரி 1-00—நிவெட்டா: வை. ஐ. கோமஸ் 1-00—சுண்டிக்குளி: பி. எஸ். ஆர். 1-00—பண்டாரவளை: சூசைமரிபீற்றர் 1-00—சூடுவெந்தபுலம்: பி. சந்தியாப்பிள்ளை 2-50—யாழ்ப்பாணம்: பஸ்ரித்தீனு சின்னத்தம்பி: 5-00—மடுல்சீனு: கே. பளனியாண்டி: 2-00, ஜே. எஸ். மாட்டீன் 2-00, ஓர்உபகாரி 1-00—உடப்புசலாவை: ஜே. எம். யோசெவ் 25-00—கல்கமுவா: ம. அஞ்சலினு 1-50—டொன் கொற்றுவா: ஆர். சி. யம்மில் 3-50—பாஷையூர்: மூப்பர் பெண் லேனு 1-00—கல்கமுவா: சீ. மரியாம்பிள்ளை -5-00—அச்சுவேலி: பி. எஸ். 1-00—களுத்துறை: ச. திமிங்குப்பிள்ளை 2-00—குருனகல்: ஜி. எஸ். சின்னத்துரை 1-00—பண்டாரவளை: எஸ். பேர்ணுட் பீற்றர் 1-00—கல்கமுவா: க. சி. அந்தோனிப்பிள்ளை -25—வேப்பங்குளம்: க. சின்னப்பு 3-00—புத்தளம்: மிசெஸ். பற்றிக் மரியாம்பிள்ளை 1-00—நாக்கியம்புலம்: அ. அன்னபாக்கியம் 3-00, ஐ. வரப்பிரகாசம் 1-00—மாருவில்: பிருங் அன்ரன் 10-00—யாழ்ப்பாணம்: பே. செபஸ்ரியாம்பிள்ளை 1-50—மாம்புரி: வ. சவிரியாம்பிள்ளை 3-00—மலாய: எஸ். யோசேப்பு 3-31—பென்ரலோனியா: எம். அந்தோனிப்பிள்ளை 1-00—நனுஓயா: எஸ். எம். சந்தனம் 2-00—பண்டாரவளை: எவ். போல்பீற்றர் 1-00, எல். பி. அன்ரனி 2-00, எஸ். அலிக் 4-00, எம். எம். சுபபிக்கா 1-00—நாத்தாண்டி: வி. டிபி. பெரேரு 7-00—வட்டகொடை: எல். ரி. எஸ். பஸ்ரியன் 1-00—அம்பிற்றியா: மிசெஸ். எம். டானியல் 2-00—காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசிஐயா 2-00—கொற்றமலை: எவ். பி. சாமுவேல் 2-00—கல்கமுவா: ஆ. பிலோமினு -75—கல்கமுவா: ம. மேரி 1-25—பண்டாரவளை: மிசெஸ். ஜே. எஸ். பீற்றர் 4-00—குருனுகல்: ஜி. எஸ். சின்னத்துரை 1-00—பெரதேனியா: எம். எம். ஜோண் 1-50—யாழ்ப்பாணம்: பி. எஸ். ஆர். 1-00—மடுல்சீனு: ஜே. எஸ். மாட்டீன் 2-00—நெலடா: வை. ஐ. கோமஸ் 1-00—மாத்தளை: டி. எவ். சீமோன் 2-00—அக்குறிசா: அன்ரன் எஸ். பஸ்ரியன் 1-00—மிருசுவில்: விக்ரோறியா 1-00—கொக்கிளாய்: அ. அன்னம்மா 2-00—புத்தளம்: பிருங் எல். லீயோ 5-00—நெடுந்தீவு: தொ. மரியான் 5-00—அம்பிற்றியா: மிசெஸ் பி.ஏ. மாட்டீன் 1.-00.

Th3 Director,
St. Joseph's Conference.
Bishop's House
JAFFNA.

சென் வின்சென் டீ போல்சபைத்தலைவர்
மேற்றிராசன மாளிகை
யாழ்ப்பாணம்.

### இஸ்பிரித். திரு. பின்வரும் 7-ம் ஞாயிறு

**சுவிசேஷ வாசிப்பு**
(மத். 7: 15—21)

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களை நோக்கித் திருவுளம்பற்றினதாவது: ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்து வருகிற கள்ளத் தீர்க்கதரிசிகள் மட்டில் எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், அவர்கள் உள்ளத்திலே பறிக்கிற ஓனுய்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய கனிகளாலேயே அவர்களை அறிவீர்கள். முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிப்பாருண்டோ? அப்படியே நல்லமரமெல்லாம் நற்கனிகளைக் கொடுக்கும்; கெட்டமரமோவெனிற் கெட்ட கனிகளைக்கொடுக்கும். நல்ல மரம் கெட்டகனிகளைக் கொடுக்க மாட்டாது; கெட்டமரம் நற்கனிகளைத் தரவுமாட்டாது. நற்கனிகளைக் கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிற்போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளைக்கொண்டே அவர்களை அறிவீர்கள். என்னை நோக்கி: ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லுகிறவர்களெல்லாரும் மோட்சஇராச்சியத்திற் பிரவேசிப்பதில்லை. ஆனால் பரமண்டலங்களிலிருக்கிறஎன்பிதாவின்சித்தத்தின்படி செய்கிறவனே மோட்ச இராச்சியத்திற் பிரவேசிப்பான்என்றுர். கிறீஸ்துவே, உமக்குப்புகழ்உண்டாவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைமேற்றிராணியாருக்குக் குதுகலமான வரவேற்பு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டிருந்தது. வாழ்த்துப்பாக்கள் படிக்கப்பட்டன. விதானையார் திரு. யோசேப்பு அவர்களால் வந்தனோபசாரப் பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. அப்பத்திரத்தில் ஆண்டவாது குடும்பத்தாரின் உருவப்படங்கள் சித்திரிக்கப்பட்டிருந்தன. பெரியவிளான் வாசிகள் சார்பாகப் பணத்தெட்சணையும் வழங்கப்பட்டது. திரு. C. T. செல்வராசா மகிழ்ச்சிஉரைகள் சாற்றினார். ஆண்டவர்அவர்கள் எழுந்து, தமக்குச் செய்யப்பெற்ற சகல உபசாணைகளுக்குமாக நன்றிகூறித் தமது தாயார் தங்களைப் பிறருக்கும், திருச்சபைக்கும் ஏற்றவர்களாக வளர்த்துவந்த தன்மைபற்றியும், கிறீஸ்தவர்கள் எப்போதும் பிறருக்காகச் சீவிக்க வேண்டுமென்பது பற்றியும், திருச்சபைக்குச் சேவைசெய்யத்தக்க குருக்களாவதற்குப் பிள்ளைகளைப் பயிற்ற வேண்டுமென்பது பற்றியும் விளக்கமாகப் பேசி ஆசீர்வாதமருளினார். பின்னர் அவரால் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டு, மறுநாள் அவராலேயே திவ்வியபூசையும் நிறைவேறியது.

### ஊர்காவற்றுறை

சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கல்லூரியின்சார்பாக ஆண்டவர்அவர்களுக்கு ஆடம்பரமான வரவேற்பு அருளப்பட்டது. 4 மணியளவில் அவர் மோட்டர்வள்ளத்திலே ஊர்காவற்றுறைமுகத்தை யடையவே கல்லூரி மாணவரும், ஆசிரியர்களும், பெற்றோரும் கூடிநின்று அவரை வரவேற்று மாலைசூட்டி அலங்கரிக்கப்பட்டிருந்த வீதியினூடே சகல வரிசைகளோடும் கல்லூரிக்கு அழைத்துச்சென்று உபசரித்தனர். ஆசிரியர் பொன்சேக்கா அவர்களால் ஆங்கிலத்தில் வரவேற்புப் பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. சைவமக்கள் சார்பாக, பண்டிதர் இ. மருதையனார் அவர்களால் மகிழ்வு தெரிவிக்கப்பட்டது. கல்லூரி அதிபர் சுவாமியாரின் வேண்டுகோளின் பேரில் அக்கல்லூரி அதிபராயிருந்து காலஞ்சென்றுபோன வண. ஏ. எஸ். யோசேப்பு சுவாமியாரின் உருவப்படத்தை ஆண்டவர்அவர்கள் திரைநீக்கம் செய்துவைத்து, நயவசனங்கள் கூறி ஆசீர்ந்தனர். பின்பு கல்லூரி மாணவரால் ஓர் டிருமா நடிக்கப்பட்டது.

## வரவு செலவுத்திட்டம்

நிதிமந்திரியாராகிய திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் வருகிற ஐப்பசி மாதம் 1-ந்திகதியுடன் ஆரம்பமாகவிருக்கும் இலங்கைப் புதியஅரசிறை வருடத்தின் வரவுசெலவுத் திட்டத்தைச் சென்றவியாழக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கலாயினர். அதன்படி புதியஅரசிறைவருட வருமானம் 56 கோடி ரூபா. செலவு 55 கோடியே 79 லட்சத்து 85 ஆயிரத்து 624 ரூபா. இத்திட்டம்பற்றிய விவாதம் பாராளுமன்றத்திலே இம்மாதம் 26-ந்திகதி ஆரம்பமாகும். ஏலவே வரவு செலவுத்திட்டவிஷயமாய்ச் சிங்களத்தில் நடைபெறும் பேச்சுகள் 20 நிமிஷத்திலும், தமிழில் நடைபெறும் பேச்சுகள் 10 நிமிஷத்திலும் முடியவேண்டுமென்று நேரக்கட்டுப்பாடுசெய்துள்ள ஸ்பீக்கர் சேர் பிரான்சீஸ் மொலமுறே அவர்கள் ஆங்கிலத்தில் நடைபெறும் பேச்சுகளுக்கும் நேரக்கட்டுப்பாடுசெய்ய ஆலோசிக்கின்றார். புதிய அரசிறைவருடத்திலே துறைமுகவரியால் 31 கோடியே 50 லட்சம் ரூபாவும், வருமானவரி, தோட்டவரி ஆதியவற்றால் 11 கோடியே 60 லட்சம் ரூபாவும், மதுபரிபாலனம், உப்பு ஆதியவற்றால் 4 கோடியே 51 லட்சம் ரூபாவும் வருமானம் வருமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

## சுதேசவர்த்தமானம்

### காலநிலை

கடந்த இருவாரங்களாகப் புசல்போன்று வீசிய பெருங்காற்றுலே ஊரில் தடிமன், காய்ச்சல் அதிகமாகத் தலைகாட்டி மக்களைப்பெரிதும் வாட்டிவிட்டிருக்கின்றன. அத்தாலே கோழிநோயும் தலைகாட்டியமையால் ஆயிரக்கணக்கான கோழிகள் தூங்கிவிழுந்து உயிர்நீங்கியிருக்கின்றன.

### தங்க யூபிலிவிழா

நமது அழியாத ஞாபகத்துக்குரியவரான வண. ஈ. குருசோவிறதர் அவர்களால் முதன்முதலாக அடியிடப்பெற்று, இதுவரை எத்தனையோ வாலிபர்களை நல்வழிப்படுத்தி வந்திருப்பதான அர்ச். சூசையப்பர் கூட்டத்தின் ஐம்பதாம்வருடப் பொன் யூபிலிவிழா இம்மாசம் 24-ந்திகதியாகிய வருகிற ஞாயிறுவாரம் அக்கூட்ட அங்கத்தவர்களால் பெரிதும் அருட்சிக்குரியவிதமாய்க் கொண்டாடப்படவிருக்கிறது. யூபிலிவிழாவிற்கு ஆயத்தமான மூத்தினஉற்சவங்கள் இன்று அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் ஆரம்பமாகிக் காலை 6 மணிக்குத் திவ்வியபூசையும், மாலை 6-30 மணிக்குத் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும் நடந்தேறும். யூபிலிவிழாவன்று காலை 7 மணிக்கு மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர்அவர்களால் யூபிலித்தோத்திர பூசைநிறைவேறும். சாயந்தரம் வேஸ்பர் பாடப்பெற்று அர்ச். சூசையப்பரின் திருச்சுரூபசுற்றுப்பிரகாரத்தோடும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தோடும் யூபிலிவிழா நிறைவாகும்.

### ஆடிச்சுப்பிறீங்கோடு

ஆண்டிலே இரண்டாம்முறையாக ஆடிமாசத்தில்ஆரம்பமாகிநடந்தேறும் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு சென்ற 18-ந்திகதி திங்கட்கிழமை ஆரம்பமாயிற்று. சங். கிறேசியன்நீதியாசர் வந்து விசாரணையைஆரம்பித்துநடத்துகின்றார். இம்முறை அதிலே விசாரணைக்கிருந்த வழக்குகள் எல்லாமாகப் 17. இவற்றிலே கொலைவழக்குகள் 6. முதலாவதாய், புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த மாதன் சின்னவன்என்பான் சென்ற தைமாதம் 26-ந் திகதியன்று வெலிங்ரன் தியேற்றரில்விட்டுத் தம்புதிரவியம்என்பவனை ஓர் கிறிசுகொண்டு குற்றிக் கொன்றானெனத் தொடரப்பெற்றிருந்த கொலைவழக்கு விசாரணைக்குள்ளாய், எதிரி தான்கைபிழைபாடாக அதனைச்செய்ததில் குற்றவாளியென ஒப்புக்கொண்டமையால் நான்கு வருடக் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனன்.

### மாஜி மகாதேசாதிபதி

இலங்கையின் முதல் மகாதேசாதிபதியாயிருந்து சமீபத்திலே தமது உத்தியோக பதவியிலிருந்து இளைப்பாறி இங்கிலாந்துக்குப் பிரயாணமான சேர் ஹென்றிமூர் அவர்கள் சென்ற 16-ந்திகதி சேமமே லண்டன் நகர்போய்ச் சேர்ந்திருக்கிறாரெனச் சமாச்சாரம் எட்டியிருக்கிறது. இவர் சிலவாரம் லண்டனிலேயே தங்கியிருந்து தமது காலுக்குச் சிகிச்சைபெற்று வருவார்.

### மூன்றுநாள் காலஎல்லை

இக்காலத்திலே எத்தனையோ கலியாணங்கள் சிலமணிநேரத்தில் அதிலும் றெஜிஸ்திரார் இசைந்துபோவாரானால் சிலநிமிஷ நேரத்தில் நிறைவேறிவிடுகின்றன. அதனால் ஆய்ந்தோய்ந்து பாராது நினைத்தமாத்திரத்தில் நிறைவேறும் இக்கலியாணங்களில் எத்தனையோ சீர்கெட்டு, ஆயிரங்காலத்துப் பயிராக வாழவேண்டிய எத்தனையோ தம்பதிகள் சிலகாலப்பயிராக வாடிவதங்கிப் போகின்றார்கள். ஆகவே கலியாணங்கள் தீவிரமாக நடந்தேறுவதைத் தடுத்து வைப்பதற்கான சிலசட்டங்களை உள்நாட்டுமந்திரியார் செய்துவருகின்றார். கலியாணவிஷயமாய் விசேஷ லைசென்ஸ் பெறுவதற்கும், பின்னர் கலியாணம் நடைபெறுவதற்கு மிடையிலே குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு தினமாவது காலஎல்லை இருக்கவேண்டுமென்று கலியாண றெஜிஸ்திரார்மார் அரசினருக்கு மனுப்பண்ணியிருக்கின்றனர். பொதுசன அபிப்பிராயமும் இதற்குச் சார்பாகவே காணப்படுகின்றது.

### மோட்டர்கார் விபத்து

மீசாலையிலே வீரசிங்கம் வித்தியாசாலைப் பெரியவாயிலுக்குச் சமீபமாகச் சென்றசனிக்கிழமை ஓர்காரும், மாட்டுக்கரத்தை ஒன்றும் மோதுண்ட காரணமாக ஒருவர் கொல்லப்பட, வேறு ஒன்பது பேர்காயமடைந்தனர். அதேவேளை சாவகச்சேரிச் சுகாதாரவைத்திய டக்றரின் கார் ஓர்மரத்தில் மோதியமையால் அவர் சிறுகக்காயமடைய, கார்சேதமடைந்தது. சாவகச்சேரியைச்சேர்ந்த தாமோதரம்பிள்ளை எனும் சாரதி செலுத்திச்சென்ற கார்புரண்டமையால் அவர் காயமடைந்து புத்தளஆஸ்பத்திரி கொண்டுபோய்ச்சேர்க்கப்பட்டுள்ளனர்.

### இரண்டுமாதச் சிறைத்தண்டனை

வல்வெட்டித்துறையிலே பாய்க்கப்பல்களின் சொந்தக்காரரும், ஓர்வியாபாரியுமான எஸ். குமாரசாமி என்பவர் சென்ற வைகாசிமாதம் 14-ந்திகதி 274 றாத்தல் கஞ்சாவும், 49 றாத்தல் அபினும் வைத்திருந்தாரென்று குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கு சென்ற 13-ந்திகதி புதன்கிழமை பருத்தித்துறை நீதிபதியால் விசாரணைசெய்யப்பெற்று எதிரி குற்றவாளியாகி இருமாதக் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றார்.

### யப்பானிய சாமான்கள்

ஐக்கியமொத்தவிற்பனவு ஸ்தாபனத்துக்கென்று யப்பானிலிருந்து சாமான்களை நேரேவாங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்காக ஐக்கியவிருத்தி உதவிக்கொம்மிஷனர் சமீபத்திலே யப்பானுக்குச் செல்லவிருக்கின்றார். இவர் அங்குசென்று யப்பானிய வியாபாரிகளை நேரில்கண்டு வேண்டிய ஒழுங்குகளைச்செய்து திரும்புவார்.

### கொள்ளை—கொலை வழக்கு

இலங்கைக் குதிரைப்பந்தயக்கிளப் பணக்கொள்ளையிலும், கொலையிலும் அகப்பட்டுள்ள எண்மரும் கொழும்புப் பிரதமநீதிபதியால் சென்றவியாழக்கிழமை சுப்பிறீங்கோட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கின்றனர். இவர்கள்எல்லாரும்சேர்ந்து தங்களைத் தமிழ்பேசும் யூரிமாரே விசாரணைசெய்யவேண்டுமெனக் கேட்டிருக்கிறார்கள்.

### மிருகபலி விலக்கு

இந்துக்கோவில்களிலே ஆடுகள், கோழிகளை வெட்டிப் பலியிடுவதை அரசினரின் சட்டம்ஒன்றாலே தடுத்துவைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இந்த இயக்கத்திலே யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையும் மற்றும் விவேகானந்தசபையும், இராமக்கிருஷ்ண மிஷனும் முன்னணியில் நிற்கின்றன. பாராளுமன்றத்திலுள்ள இந்துஅங்கத்தவர்கள் புதியசட்டத்தை ஆதரிக்கச் சம்மதியளித்திருக்கிறார்கள்.

### கடனே காரணமாம்

இரத்தினபுரியைச்சேர்ந்த பால்ம்காடின் எனுமிடத்து ஐக்கியபண்டகசாலையின் கிளைமனேஜரான ஆறுமுகதாசன்என்பவர் ஓடிக்கொண்டிருந்த ஓர்றெயின் வண்டியின்முன்னால் குதித்துத் தற்கொலை செய்துகொண்டதாகச் சொல்லப்படுகிறது. இவர் அவ்வாறு செய்யுமுன் பற்பலருக்கும், கடிதங்களும், தந்திகளும் அனுப்பிக் கடன் காரணமாகத் தான் தற்கொலைசெய்துகொள்வதாகத் தெரிவித்துக்கொண்டாராம். மரணவிசாரணையின் பின் இவர் பிரேதம் தகனஞ் செய்யப்படுவதற்காக யாழ்ப்பாணம் கொண்டுவரப்படலாயிற்று.

## தேவை

வண. சுவாமி S. ஞானப்பிரகாசர் O. M. I. அவர்கள் எழுதி வெளியிட்ட "யாழ்ப்பாணவைபவ விமர்சனம்" விலையைக்குறித்து எழுதுக.

க. நவரத்தினம்
1 B. A. தம்பிஒழுங்கை
யாழ்ப்பாணம்.

## வேத புஸ்தகங்கள்

| | |
|---|---|
| அர்ச். கூரேதார்சின்சரித்திரம் | 2-00 |
| ஞானமிர்த தடாகம் | 2-75 |
| ஞானஉபதேச தடாகம் | 2-75 |
| பிரதானமந்திரங்களின் வியாக்யானம் | 2-25 |
| தேம்பாவணி (3 காண்டம்) | 15-50 |
| திருவருஷம் | 3-75 |
| மாதாவின் மாலை ஆராதனை | 0-25 |

தாமஸ்ரோட்றீகோ அன்சன்ஸ்,
புத்தகவியாபாரிகள்,
கொழும்பு—13.

## யாழ்ப்பாண றெயில்வே ஸ்றேஷன்

யாழ்ப்பாணப்பட்டின றெயில்வே ஸ்றேஷனை முற்றாகத்திருத்தி அமைப்பதற்கென்று ஒருபெருந்தொகைப் பணம் ஒதுக்கிவிடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. வேலையும் உடனே தானே ஆரம்பிக்கப்பெற்று இவ்வருடமுடிவிலே பூர்த்தியாகுமாம். அப்போது ஸ்றேஷன் முழுவதற்குமே மின்சாரதீபங்கள் ஏற்றப்படும். இப்போதைக்குப் பிரயாணிகளின் வசதிக்காகக் கூடியமட்டும் போதியலைற்றுக்கள் போடுமாறு ஸ்றேஷன்மாஸ்றருக்கு றெயில்வே அதிகாரிகள்தெரிவித்திருக்கின்றனர்.

## அர்ச். அந்தோனியார் கோவில் திருப்பணி நிதி
### புங்குடுதீவு

புங்குடுதீவு மேற்கிலே கோடியற்புதரான அர்ச். அந்தோனி முனீந்திரர் பேரால் நவமாகக் கட்டப்படவிருக்கின்ற புதியகோவில் திருப்பணிநிதிக்குத் தங்களால்இயன்றஉதவிபுரியுமாறு அம்முனிவரின் பக்தகோடிகளையெல்லாம் அன்பாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

S. P. ALFRED
கட்டளைக்குரு.

—இந்திய அரசாங்க சுகாதாரமந்திரியும், றோமைநகரில் நிகழ்ந்த உலக சுகாதாரஸ்தாபன மகாநாட்டுக்கு இந்தியதூதுக்கோஷ்டிக்குத் தலைமைவகித்துச் சென்றவருமான ராஜ்குமாரி அம்றிற்காருக்குப் பரிசுத்த பாப்பரசர் சென்றஆனிமாதம் 21-ந்திகதி பேட்டியளித்து 20 நிமிஷம் வரையில் சம்பாஷித்தாரெனச் செய்திகிடைத்திருக்கிறது.

—சலேசியன் சபையை அடியிட்டவரான அர்ச். தொன்பொஸ்கோவை நன்றாய் அறிந்தவரான 96 வயசுடைய வண. லன்கன் சுவாமியார் வெஸ்ற்மீத்தைச்சேர்ந்த மொவேற் எனுமிடத்து விசாரணைப்பங்குக் குருவராய்த் தற்போது இருந்துவருகின்றார். இவ்வர்ச்சியசிஷ்டரின் சீவியவரலாற்றைக் காண்பிக்கும் சினிமாப்படம் சமீபத்தில் அத்லோன் எனுமிடத்தில் காண்பிக்கப்பட்டபோது, இவரும் அதைப்பார்த்திருக்கின்றார்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 21 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org